மே 1935. மலர் 12—இதழ் 11.

வருஷ சந்தா
ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி
அம்மாள்.

பு[illegible]ாவல் ஆரம்பம்

# ஆனந்தஸாகர்

அல்லது

# பந்தயத்தின் முடிவு

அதிகாரம்

1. பகரொணாச் சீற்றம்—பழங்கதைத் தோற்றம்
2. தியாகியின் விஜயம்—சாகரனின் குழப்பம்
3. வாழாவெட்டி
4. பத்திரிகை உரைகள்—தத்தளித்த நிலைமை.

---

## 13-வது ஆண்டுக் கொண்டாட்டம்

பல பரிசுகளும், ஒரு வருஷ சஞ்சிகையும் இனாம்.

உ[illegible]ருக்கும் விளம்பரத்தைக் கவனியுங்கள்.

[illegible]ாகினி" ஆபீஸ்
[illegible]
[illegible]கேணி, சென்னை

JL
வை AN22J m
N35·12·11.
182982

## பதின்மூன்றுவதாண்டுப் பரிசுகளி... ம்

முதல் பரிசு
**ரூ. 25.**

2-வது பரிசு
**ரூ. 15.**

புது வருஷ
சந்தாவை டிசம்பர்
மாதம் **20**-ந் தேதிக்குள் அனுப்பு...
சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு
**6** பிரைஸ் சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு
இதிற்கண்ட பரிசுகள்
கொடுக்கப்படும்.

3-வது பரிசு
**ரூ. 10.**

3 பரிசுகள்
**ரூ. 5 விகிதம்.**

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நேயர்கட்கு அடுத்த ஆண்டின் சஞ்சிகையை இனமாக அனுப்புவதுடன் அவர்களும் ஷை பரிசுப் பொட்டியில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

தயவு செய்து
புது வருஷ சந்தாவை
முன்பணமாக அனுப்புங்கள். உங்களது
சந்தா நப்பரை மறக்காமல்
எழுதவும்.

"ஜ...ன்மோகினி" ஆபீஸ்,
தாடி... தெரு, திருவல்லி...கேணி செ...

ஸ்ரீ

# ஆனந்தஸாகர்

அல்லது

# பந்தயத்தின் முடிவு.

---

## முதல் அதிகாரம்

### பகரோனு சீற்றம் — பழங் கதைத் தோற்றம்

182982

"உலகத்தில் ஒவ்வொருவரும் தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று ஸ்தாபித்துப் பேசுவதுதான் மனித சுபாவத்திற்கு முக்கியமான பிடிவாதமாகும். அம் மாதிரி பிடிவாதம் செய்யும் ஒவ்வொருவரும் தாம் செய்வது சரியானதா! வேண்டுமென்று செய்வதா என்பதை தம் மனத்திற்குள் அறியாதிருக்க முடியாது. அறிந்து தான் வீண் ஜம்பத்திற்குப் போராடுவதும் உண்டு. சாகர்! நீயும் அம்மாதிரி கோஷ்டியில் சேர்ந்துதான் மூர்க்கமாகப் பேசுகிறாய் என்று நினைக்கிறேன். இந்த வீண் உபயோகமற்ற பிடிவாதத்தை விட்டு விடு" என்று ஓர் இளம் வாலிபன் தன் நண்பன் சாகரனை நோக்கி நகைத்துக் கொண்டே சொன்னான்.

இதைக் கேட்ட சாகரன் முகத்தை சுளித்துக்கொண்டே "ஏதேது சிவானந்தம்! என்னோடு தினம் தர்க்கம் செய்வதுதான் உன் காரியமாக எண்ணி இருக்கிறாயோ! நீ எத்தனைதான் சொன்ன

போதிலும் என்னுடைய அபிப்பிராயம் மாற்றவே முடியாது. பெண்களாவது, மண்களாவது...சீச்சி! பெண் என்கிற வார்த்தையையே விட்டு விடு. பெண்கள் என்ற சப்தம் காதில் விழுந்தால் நாராசம்போலிருக்கிறது. நண்பா! இந்த விஷயத்தில் நீ என்னேடு வீண் வாதம் செய்வதில் உபயோகமில்லை'' என்று முடுக்காகக் கூறினன்.

சிவானந்தம்—சாகர்! நீ சொல்வது வெகு அழகாயிருக்கிறது. பெண்களென்றுலே நாராசம்போலவிருக்கிறதா! அப்படியானல் பெண்களே இவ்வுலகத்திற்கு அவசியமற்ற கட்டைகள் என்பது உன்னுடைய அபிப்பிராயமா! ஏனப்பா! நீ உன் தாயாகிய முதல் தெய்வத்தின் மூலம் இம் மண்ணுலகத்திற்கு வந்தாயா! அல்லது ஆகாயத்திலிருந்து இறங்கிவிட்டாயோ!...போடா! இவ் விஷயத்தில் நீ சுத்த மூடம். முட்டாள் என்றுதான் நான் நிச்சயமாகக் கூறுவேன்.

உலகத்தில் பெண்கள் இல்லாவிட்டால் உலகமேது. பெண்களாலன்றே உலகம் பிரகாசிக்கின்றது! மக்கள் விருத்தி ஏற்படுகின்றது. ரமணீயமான சிங்காரத் தோற்றம் உண்டாகின்றது. பெண்களில்லா வீடு பாழடைந்த காடல்லவா!

சாகர்.—ஓகோ! அப்படியானல் என் வீடு காடுபோலவா இருக்கின்றது. வீடாகத் தோன்றவில்லையா!

சிவானந்தம்—சந்தேகமில்லாது உன் வீடு காடுதான். நீ எத்தனை தான் வீண் பறை சாற்றினுலும் பார்ப்பவர்களுக்குக் கண்ணில்லையா? ஹ்ருதயமில்லையா? மூளையில்லையா! நீ ஏதோ பயித்தியக்காரன் போல இவ் விஷயத்தில் தப்பபிப்ராயத்துடன் பிதற்றுகிருய்! சாக்ஷாத் எம்பெருமான்களெல்லாம் பெண்களுக்கு எத்தகைய ஸ்தானத்தைக் கொடுத்து நமக்குச் சிறப்பித்துக் காட்டியிருக்கிறூர்கள் பாரு.

ஸ்ரீ மகாவிஷ்ணுவோ, தன்னருமைக் காதலி லக்ஷ்மியை தனது இருதய கமலமாகிய மார்பகத்திலேயே வைத்து மகிழ்கிறூர். சிவபெருமானே சக்தி தேவியாகிய தன் மனைவிக்கு தனது ஒரு பாகம்

தையே இருப்பிடமாகக் கொடுத்து அதில் வீற்றிருக்கச் செய்து பரமானந்த மடைகிறார். கல்வியின் வித்தாகிய சரஸ்வதியை சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமன் தனது நாவிலேயே வைத்துக் களிக்கின்றார். இம் மூவரின் ஆதாரம் ஒன்றே போதாதா!

இன்னும் வேண்டுமானால் பாரு. உயர்ந்த மகிமை பொருந்திய யாவும் பெண்கள்தாம் என்பதற்கு ஆதாரம் ஆகாயவாணி, பூமி தேவி, புண்ய நதிகள் என்று போற்றும் அனைத்தும் பெண் தெய்வங் களே யாகும். நாம் நிற்பதும் பெண்மீதுதான். நாம் கண்டு களித்து அனுபவிக்கும் இயற்கை யழகும் இயற்கைதேவி என்னும் பெண் ணுடையதுதான். நாம் படிப்பதும், நடப்பதும், எடுப்பதும் யாவும் முத் தெய்வங்களாகிய செல்வத்திற் கதிபதியாகிய லக்ஷ்மீ கடாக்ஷ மும், சக்தியளிக்கும் சக்தி தேவியின் அனுக்ரகமும் கலைவாணியின் கருணையும் ஆகியவைகளால்தான் என்பதை இன்னும் உணர வில்லையா?

உலகத்தையும் நம்மையும் படைத்த ஆதி தெய்வங்களே இத் தகைய ஆதாரத்துடன் விளங்குகையில் நீ எம்மட்டும்? உன் பிடி வாதத்திற்கு மதிப்பு ஏது? பெண்களை நீ அலக்ஷியம் செய்து வெறுப்பதானது உன் தாயாரையே, சகோதரிகளையே வெறுப்பதாக வும் அவமதிப்பதாகவும்தான் ஆகும்.

சாகரர்! ஒரே ஒரு உதாரணம் பாரு: நீறில்லா நெற்றி பாழு, நெய்யில்லா உண்டி பாழு. ஆறில்லா ஊரு பாழு.........இவைகள் போன்று ஒரு பெண்மணி இல்லா வீடு பாழே பாழுதான். நீ ஆயி ரம் பணக் குவியலின் மத்தியில்தான் தாண்டவம் செய். பணத்தின் மேலேயே புரளு. எது செய்தாலும் எது இருந்தாலும் உன் வீட் டில் அலங்காரமாக ஒரு ஸ்திரீ ரத்தினம் இல்லாதது மூளி மூளி தான். இதை மறுக்க ஒருவராலும் முடியாது.

வீணை காலத்தைக் கடத்தாதே: கல்யாணத்தைச் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்நாளைக் கடத்து. இந்த மொண்டி பிடிவாதம் வேண்டாம். ஒரு மனிதனுக்கு பிறந்த நாள் முதல்

இறக்கும் நாள் வரையில் பெண்கள்தான் ஜீவாதாரமாக விளங்குகிருர்கள். முதலில் பாலூட்டித் தாலாட்டி சீராட்டி அறிவு புகட்டி அன்பு காட்டி வளர்ப்பவள் முதல் தெய்வமாகிய அன்னேதான். ஈ எறும்பு தீண்டாது பாதுகாத்து மார் மீதும் தோள் மீதும் சுமந்து திரிந்து வியாதி வக்கை வந்த காலத்தில் கண்மணியை இமை காப்பது போலக் காத்து ரக்ஷிப்பவள் அந்த அன்னேதான்.

பிறகு யுக்த வயதில் சரியான உத்தம மனைவி வந்து அந்த பாரங்களேத் தான் ஏற்றுக்கொண்டு புருஷனின் நிழல் போலவிருந்து சகலமான சுக துக்கத்திற்கும் ஈடு கொடுக்கும் இணை இல்லா இல்லரசியாகி விடுகிருள். சாகரா! பெண்களுக்குள்ள சிற்சில அம்சங்கள் முக்கியமாக பொறுமையும், பணிவும், குணமும், கனிவும் எத்தனே கரணம் போட்டாலும் ஆண்களிடம் வராது என்பது பெரியாரின் அபிப்பிராயமாகும். இவை என்னுடைய வார்த்தைகளல்ல. ஒரு அருமை மனேவியைப் பற்றி ஒரு புலவர் கூறி யிருப்பதைப் பாரு.

அன்னே தயையும் அடியார் பணியும் மலர்ப்
பொன்னினழகும் புவிப் பொறையும்—வன்னகலேயும்
வேசிதுயிலும், வீரன் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

என்ற பாடலின் தத்துவத்தைப் பார்த்தாயா! மனேவியானவள் மந்திரியைப் போல புத்திமதிகளும் கூறுவாள் என்ற அத்தனே பெருமைகளே ஸ்திரீகளுக்குக் கொடுத்திருக்கிருர்கள் பாரு. அதனுலேயே தான் மேல் நாடுகளில் ஸ்திரீகளுக்கு முக்கியமான மரியாதை ஸ்தானம் கொடுப்பதோடு, ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளேக் கவனிக்கும் முக்கிய காரியத்திற்கும் நர்ஸாக ஸ்ரீமணிகளேயே நியமித்திருக்கிருர்கள். நம் நாட்டிலும் அதைப் பின்பற்றி இப்போது ஆஸ்பத்திரிகளில் நர்ஸ்கள் ஏற்படுத்தி யிருக்கிருர்கள்.

சாகரன்:—(இடை மறுத்து) சிவானந்தா! வீண் ராமாயணம் எதற்கு அளக்கிருய்! எனக்கு இவைகளில் நம்பிக்கை கிடையாது. எனது தனி வாழ்க்கைதான் எனக்கு ப்ரம்மானந்தமாக இருக்கிறது. இதுதான் உண்மை......பெண்கள் பெண்கள் என்று பேய்க் கூட்

டத்துக்குப் பெருமையைத் தராதே. எனக்குக் கல்யாணமும் வேண் டாம். கர்மாதியும் வேண்டாம்......

சிவா:—அவசரப்படாதே யப்பா! நான் சொல்வது உனக்கு வீண் பேச்சாகவும் நீ சொல்வது எனக்கு வீண் பேச்சாயு மிருக்க லாம். இருவர் பேச்சையும் அபிப்ராயத்தையும் பொதுவானவர்க ளல்லவா முடிவு கூறவேண்டும். பெண்கள்தான் வாழ்க்கைத் துணைக் கும் ஆநந்தத்திற்கும் ப்ரதானம் என்று நான் சொல்கிறேன். நீ அதை மறுக்கிருய்: ஜனங்கள் எதை ஒப்புக்கொள்வார்கள் என்பது ஒன்று இல்லையா!

சாகர்:—அட என்னடா தலை வேதனை! பெண், பெண் என்று உனக்கு பெண் பயித்தியம் தான் பிடித்துவிட்டது. எழவெடுத்த பெண்கள். நீயே காலையும் மாலையும் பெண்களுக்கு கும்பிடு போடு. எனக்கு உன் உபதேசம் வேண்டாம். நான் போகிறேன்...... என்று கிளம்பினுன்.

சிவா:—(தடுத்து), நில்லப்பா! இதென்ன இத்தனை கோபம் வரு கிறதே! உன்னேடு பேச எனக்குப் பிடிக்கவில்லை என்று நீ கழுத் தைப் பிடித்துத் தள்ளினுலும் நான் என்னவோ போகமாட்டேன். உன்னுடைய க்ஷேமமும் சுகமும்தான் என்னுடைய இன்பமாகும். ஆதலால் நீ வீண் பேச்சுகள் பேசாதே! என்றைக்கும் ஒண்டிக் கட்டை வாழ்க்கை நம்போலியற்கு சிறிதும் தகாது. முற்றுந் துறந்த முனிவர்களுக்கும் அவ்வாழ்க்கை சிலருக்கு அசாத்ய மென் ருல் நீ எம்மாத்திரம். எதனுல் உன் மனத்தில் இத்தகைய எண் ணம் தாண்டவமாடுகின்றது?

சாகர்.—அதற்குக் காரண மெல்லாம் கேட்காதே! என் மனத் தில் தோன்றியபடித்தான் நான் நடப்பேன். என் சினேகிதனின் இளைய தாயாரால் அவன் படும் துன்பமும், அவன் பிதா தவிக்கும் தவிப்பும் கூறவேண்டுமா? சீச்சி! அந்த பெண் பேய் ஏன் உலகத்தில் ஜனித்தது என்று தோன்றுகின்றது. இன்னெரு சினேகிதனின் சகோதரியின் பரிபவம் கூறத் திறமே இல்லை. இந்த மாதிரி கோரா மைகளுக்கு நான் இலக்காக மாட்டேன். பெண்ணரக்கிகளை நான்

வெறுத்துவிட்டேன். ஆகையால் இனி நீ தொந்தரவு செய்யாதே. இந்திரன் கெட்டதும் பெண்ணாலே என்ற பாடலை மறந்துவிட்டாயா!

சிவா:—ஓகோ! இந்த அல்ப உதாரணங்களைக் கொண்டா நீ இந்த பிடிவாதம் செய்கிறாய். சேச்சே! எனக்கு மிகவும் வெட்கமாக இருக்கிறது. உலகத்தில் எங்கேயோ ஒரு தூமகேது இவ்விதமிருந்தால் எத்தனையோ நல்ல உத்தமிகள் இருக்கிறார்களே அவர்களைப் பார்த்து ஏன் நீ நல்ல எண்ணம் கொள்ளக்கூடாது......அதோ பாலுசாமி வருகிறான் அவனைக் கேட்கலாம். பாலூ! வா. நமது சாகரனுடைய செய்திதான் நீ அறிந்ததாயிற்று. அவன் கொண்டிருக்கும் அபிப்ராயம் சரியானதா, தப்பானதா! என்பதைப் பொதுவாயுள்ள நீ சொல்லு பார்க்கலாம்.

சாகரன்:—இதென்னடா பரீக்ஷையா! அவரவர்களின் மனப்படி அவரவர்கள் நடக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். எனது அபிப்ராயத்தை மாற்ற உங்களால் ஆகுமா! ஸ்ரீகள்தான் சனியன். ஸ்ரீகள் தொந்தரவு பீடைகள். ஸ்ரீகள்தான் மனிதனுக்கு மறலி! எனக்குப் பிடிக்காத வார்த்தையும் வேதாந்தமும் வேண்டாம் நிறுத்துங்கள்.

பாலு:—சாகர்! இதென்ன அத்தனை மூர்க்கமாகப் பேசுகிறாயே! இது உலகத்திலேயே ஒப்புக் கொள்ளக்கூடாத விபரீத விஷயமாக வன்றோ விருக்கிறது. அப்பேர்ப்பட்ட விச்வாமித்திர முனிவரும் தபம் கலைந்து பெண் மோகத்தில் மதி மயங்கினார் என்றால் நீ எம்மட்டும்?

சாகர்:—ஆம்! ஆம்! பாழும் பெண்களின் துன்பம் இப்போதாவது தெரிகிறதா! மகா தபஸியின் தபஸைக் கெடுக்கும் சண்டாளியாக வன்றோ ஆகிவிட்டாள்...சீச்சீ......வேண்டாம் பேசாதே......

பாலு:—சாகர்! இரு! இரு!! ஆத்திரப்படாதே! நான் சொல்லுகிறபடி செய்யுங்கள். அதிலிருந்து உங்கள் சண்டை சமாதானமாகிவிடும். அதாவது நீ உன் கருத்தை ஒழுங்கு படுத்தி கற்பனை உருவ

மாகச் சித்தரித்து ஓர் சிறு கதை எழுது. சிவானந்தமும் ஓர் கதை எழுதட்டும். அவ்விரண்டையும் பல காப்பிகள் எடுத்து பல ப்ரபல பத்திரிகைகளுக்கு அனுப்புங்கள். பகு ஜன வாக்கே வேத வாக்காக வந்து எதற்கு மதிப்பும் ருசியும் இருக்கிறதோ அதைக் கூறுவார்கள். பிறகு உன்னபிப்ராயத்தினின்று என்ன முடிவு செய்கிருயோ செய்துகொள்ளு. இந்த யோசனையை நான் வெகு நாட்களாக உன்னிடம் சொல்ல நினைத்தேன். இன்றுதான் சமயம் வந்தது—என்ருன்.

இதைக்கேட்ட சிவாநந்தம் அக் கருத்தை யாமோதித்து, "ஆம் ஆம்! இதுதான் சரி: இப்படித்தான் செய்யவேண்டும். சாகரா! என்ன யோசனை செய்கிருய்? இன்னும் உனக்கு மூன்று நாட்கள் வேண்டுமாயின் நேரம் எடுத்துக்கொள்ளு. நன்ருக யோசனை செய்து சொல்லு." என்று நயமாகவும் அன்பாகவும் கூறினன்.

இதைக்கேட்ட சாகரன் ஏதுமே பதில் சொல்லாமல் சமிக்ஞை யினுல் தலையை யசைத்து அவர்களை யனுப்பிவிட்டான். அவனுக்கு மனது என்னமோ நிம்மதியின்றி ஏதோ ஒரு விதமான குழப்பத் தையே அடைந்திருந்தது. இந்த விஷயத்தில் எத்தகைய தீர்மா னத்திற்கு வருவதென்ற முடிவே அவன் மனத்தில் தோன்றவில்லை. ஆனல் பெண்கள் விஷத்தில் அவன் கொண்டுள்ள வெறுப்பும் விச் யாசமும் ஒரு சிறிதும் மாறவோ பேதிக்கவோ இல்லை.

சாகரனின் வயது கொஞ்சமே எனினும் அவன் மன உறுதி யும், தீரமான வைராக்ய எண்ணமும், அபாரமான ஞாபக சக்தியும் உடையவன். சாகரனின் பிதா மிலிடரியில் வேலையாக இருந்தார். ஒரு சமயத்தில் நெருக்கடியான சம்பவம் நேரிட்டு மிலிடரியின் கூட் டத்துடன் யுத்த சம்பந்தமாக அயல் நாட்டிற்குச் செல்ல நேர்ந்தது.

அம்மாதிரி சம்பவம் நேர்ந்த காலையில் சாகரன் 5 வயது குழந்தை. அவனிடத்தில் அவன் பிதாவுக்குள்ள அளப்பரிய ப்ரேமை யும் அவனே தன் ஜீவாதாரம் என்ற ஓர் தடுக்க வியலாத நம்பிக்கை யுடன் கூடிய வாஞ்சையும் சேர்ந்து அவரைத் துணிந்து யுத்தத்திற் குப் போக விடாது தடுத்துப் போராடியது.

'என்னருமைக் குழந்தையையும், மனைவி, தாயார் இருவரையும் விட்டு விட்டு எவ்வாறு அன்னிய நாட்டிற்கு அதிலும் யுத்தத்திற்குச் செல்வது? சென்றால் திரும்பி வருவேனோ மாட்டேனோ! என் கதி எப்படி எப்படி முடியுமோ! என்ன செய்வேன்?' என்று தனக்குள்ளேயே போராடித் தவித்தார். தன்னைத்தான் எத்தனை சமாளித்துக்கொண்டும் அவரது மனம் நிம்மதியடையாமல் குழம்பிவிட்டதால் தான் போகாமல் நின்றுவிடுவதென்றே தீர்மானித்துவிட்டார்.

ஆனால் அவருடைய தாயாரும் மனைவியும் அவருடைய மன வருத்தத்தையும் பரிசுத்தமான ஆழ்ந்த அன்பையும் புத்திர வாஞ்சையின் அருமையையும் சற்றும் அறியாத அறிவிலிகள்—மூடங்கள்—ஆகையினால் "யுத்தத்திற்குச் சென்றால் சம்பளம் அதிகமாக வரும். அதிகப்படி வரும்படியும் கிடைக்கும். யுத்தத்தில் ஜெயம் பெற்று வந்தால் சன்மானங்கள் கிடைக்கும். ஒருக்கால் அப்படி தவறிவிட்டாலும் தலைமுறைக்கும் பணம் கொடுப்பார்கள். இத்தகைய நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிட்டால் மீண்டும் கிடைக்குமா! பிள்ளையும் குட்டியும் கட்டியழுதால் பணம் வந்துவிடுமா! வறுமை நீங்கிவிடுமா! என்றும் இப்படியே இருந்தால் நாம் நாலு பேருக்குச் சமமாக இருந்து சந்தோஷமடைவது எப்போது? பணம் சம்பாதிக்க வகை இல்லாது தைரியமில்லாது இப்படி கோழையாக இருப்பார்களா!" என்று தொந்தரவு செய்துவிட்டார்கள்.

பாசத்தினால் ஊசலாடுபவன் என்ன பதில் கூறுவான். தன்னைப் பெற்ற தாயே தான் பணம் சம்பாதிக்கும் கருத்திலேயே இருக்கிறாள்!......கட்டிய மனைவியும் அதே எண்ணத்துடன் இருக்கிறாள்!......இருவரும் என்னிலைமையைக் கவனித்தார்களா! யுத்தத்திற்குச் சென்றால் உயிருக்கே ஆபத்து வந்தாலும் வருமே! பணத்திற்காக ஆசைப்பட்டு அடியோடு ஆளே மோசமாகிவிட்டால் என்ன செய்வது என்ற யோசனை ஒரு சிறிதாவது செய்தார்களா?

ஹா! உலகமே! பணந்தானா உயிரைவிடப் பெரிது. பணத்தின் மூலம் பின்னால் என்ன நேருமோ? ஆபத்து என்கிற யோசனையும் போய்விட்டதே! எல்லாம் வெறும் மயக்குதான். பணந்தான்

# மோகினிச் செல்வியின் வேண்டுகோள்

அன்பு மிக்க சகோதர சகோதரிகளே !

வருடத்திற்கொரு முறை உங்களிடம் மோகினிச்செல்வி வந்து, உங்கள் பேராதரவைக் கோரும் வழக்கம் போன்று இவ்வருடமும் வந்திருக்கிறாள். தயாபரனின் கருணையினாலும், உங்களுடைய பேரன்பும் ஆதரவினாலும் மோகினிச் செல்வி தனது 12-ஆண்டுகளை முடித்துக்கொண்டு மங்கள கரமாக ஜனவரி மாதத்தில் தனது பதின்மூன்ருவதாண்டை அடையப்போகிறாள் என்கிற சந்தோஷச் செய்தியை உங்களுக்குத் தெரிவித்து, உங்கள் பரிபூரண ஹ்ருதய அன்புடன் அளிக்கும் வருடச் சந்தா ரூபாய் ஒன்றரையை பெற்றுக்கொள்ள உங்களிடம் வந்துள்ளாள்.

அன்பர்களே! மிக்க அறிவாளிகளாகிய உங்களுக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதொன்றுமில்லை. உங்களுடைய உதவியினாலும், அபார அன்பின் ஆசியினாலும் தினை தினை வளர்ந்தோங்கும் மோகினியின் நலனைக் கோருபவர் நீங்களேயாதலால் அவளுடைய 13-வதாண்டின் போஷணைக்கும் நீங்கள் தாமதம் செய்யாமல் உங்கள் சந்தாப் பணத்தை மணியார்டர் செய்யுமாறு வேண்டுகிறேன். மாதம் இரண்டணு; வருடம் ஒன்றரை ருபாய் உங்களுக்கோர் பெரிதல்ல. பல துளி பெரு வெள்ளம் என்பது போல பல ஆயிரக்கணக்கான உங்களின் உதவியால்தான் மோகினி களிப்புற்று விருத்தியடையவேண்டும் என்பது நீங்களறிந்த தேயாகும். உங்களுடைய மறக்கமுடியாத அன்பிற்கும், உதவிக்கும் மோகினியும் யானும் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நேயர்களே ! தேச சேவையின் நிமித்தமாக ஏற்பட்ட சுற்றுப் பிரயாணத்தினால் நமது மோகினி குறித்த தினத்திற்குமேல் சில தினங்கள் தாமதமாகிவிட்டதற்கு தேச நலனைக் கோரி மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

ஸ்ரீமதி

# வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | "ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| வைதேகி (2-பாகங்கள்) | 2 | 8 | ... | 2 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | ... | 2 | 0 |
| ராதாமணி (2-பாகங்கள்) | 2 | 8 | ... | 2 | 0 |
| சாருலோசனு (2-பாகங்கள்) | 2 | 8 | ... | 2 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | ... | 2 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | ... | 1 | 12 |
| ருக்மிணிகாந்தன் | 2 | 0 | ... | 1 | 12 |
| சாமளநாதன் | 2 | 0 | ... | 1 | 12 |
| தியாகக்கொடி | 2 | 0 | ... | 1 | 12 |
| மங்களபாரதி | 2 | 0 | ... | 1 | 12 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | ... | 1 | 8 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | ... | 1 | 8 |
| ஸாரமதி | 1 | 12 | ... | 1 | 8 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | ... | 1 | 4 |
| பரிமளகேசவன் | 1 | 4 | ... | 1 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | ... | 1 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | ... | 0 | 14 |
| கதம்பமாலை | 1 | 0 | ... | 0 | 14 |
| புத்தியே புஸதயல் | 0 | 14 | ... | 0 | 12 |
| கோபாலரத்னம் | 0 | 14 | ... | 0 | 12 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | ... | 0 | 8 |
| நளினசேகரன் | 0 | 8 | ... | 0 | 6 |
| வீரவஸந்தா | 0 | 8 | ... | 0 | 6 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | ... | 0 | 6 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | ... | 0 | 6 |
| பிச்சைக்காரக் குடும்பம் | 0 | 8 | ... | 0 | 6 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | ... | ... | |
| ஜெயஸஞ்சீவி | 0 | 4 | ... | ... | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | ... | ... | |

ரூ. 26 முன்பணம் அனுப்புவோருக்கு 29 நாவல்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

ரூ. 5/-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினுல் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

**"ஜகன்மோகினி" ஆபீஸ்,**

**26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.**

# பதின்மூன்றுவதாண்டு

**1936**ஸு ஜனவரி மாதத்தில் பிறக்கப் போகின்றது.

வை. மு. கோதைநாயகி அம்மாள்
ஆசிரியை

மாதாந்த
நாவல்
சஞ்சிகை

## ஜகன்மோகினி

வருஷ
சந்தா
ரூ. 1 8 0.
தனிப்பிரதி
அணா இரண்டு

அதற்குள் நமது சஞ்சிகைக்குப் புதிய சந்தா நேயர்களைச்சேர்த்து, முன்பண மனுப்புவோருக்கு அடியிற் கண்டபடி ஒரு வருஷ சஞ்சிகையும், மறு பக்கத்தில் கண்டபடி நாவல்களும் இனமாக அனுப்பப்படும்.

மூன்று புதிய சந்தாதாரர்களைச்
சேர்த்து முன் பணம்
அனுப்புவோருக்கு

## ஒரு வருஷ சஞ்சிகை இனம்.

இப்பொழுது
சந்தாதாரராக இருப்பின்,
அவர்களுக்கு அடுத்த ஆண்டு முழுதும்
சஞ்சிகை இனமாக அனுப்பப்படும்; அல்லது
அவர்களுக்கு வேண்டிய நாவல் அனுப்பப்படும்.

# முற்றிலும் இனாமாக நாவல்கள் வேண்டுமா ?

ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்து முன்பண மனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனாம்

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்

பரிமளகேசவன்
உத்தமசீலன்
கதம்பமாலை
சுகந்தபுஷ்பம்

2 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த நான்கில் ஒன்று இனாம்

3 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு இந்த மூன்றில் ஒன்று இனாம்

கௌரீமுகுந்தன்
ஸாரமதி
சோதனையின் கொடுமை

நவநீதகிருஷ்ணன்
சாமளநாதன்
ருக்மிணீகாந்தன்

4 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த மூன்றில் ஒன்று இனாம்

5 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு இந்த ஐந்தில் ஒன்று இனாம்

வைதேகி
பத்மசுந்தரன்
ராதாமணி
சாருலோசனை
காதலின் கனி

ப்ரதானம்.'' என்று தனக்குள் இரவு பகல் எண்ணி வருந்தினர். கடைசியில் எக்கதியானலும் ஆகட்டும். கடவுள் கிருபையினல் திரும்பினல் திரும்புகிறேன். இல்லையேல் என் விதியைப்போல ஆகட்டும்.

போகாதிருந்தால் ஆபீஸுக்கும் பொல்லாப்பு. மற்றவருக்கும் ஏச்சு. வீட்டிலும் சதா ஏளனமும், குத்தலும் கலந்த பாணப் பிரயோகம் போன்ற சொற்கள். இத்தனை ஆபத்து எதற்கு. விதியே! உன்னுட்சியை நீ செலுத்து'' என்று மனத்தை யொருவாறு தேற்றிக்கொண்டு துணிந்துவிட்டார்.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்பது போல அவருடைய ஆசாபாச மெல்லாம் பறந்து போய் வெறுப்பாக மாறிவிட்டன. உடனே மிலிடரியுடன் போகப் புறப்பட்டு விட்டார். சாகரனைப் பலதரம் கொஞ்சி முத்தமிட்டுப் பிரிய மனமில்லாது பிரிந்து சென்ருர்.

அன்னிய நாட்டிற்குச் சென்ருர். மனமோ நிம்மதி கொள்ளாது தத்தளிக்கின்ருர். எத்தனை மன உறுதி கொண்டபோதிலும் பாசம் விடாமல் சாகரனின் முகம் கண்ணெதிரிலேயே தோன்றி அவரைப் பித்தனுக்கிவிட்டது. சதா தன் மகனையும் மற்ருேரையும் எண்ணி ஏங்கி கண்ணீர் பெருக்கிக் கதறுவார். அன்னிய நாட்டின் புதிய வாழ்க்கையைச் சற்றும் அவர் விரும்பவில்லை. எல்லாம் புதிதாகவே நூதனமாகவே மன வெறுப்புற்று விளங்கின.

புதிய தேசமும் தேகத்திற்கு ஒத்துக் கொள்ளாது வருத்தியது. தலை விதியே என்று தன் தொழிலைச் செய்து வந்தான். சம்பளத்தை வாங்குவதும் அதை உடனே தன் தாயாருக்கும் மனைவிக்கும் அனுப்பி விடுவதுமாகத், தான் ஓர் யந்திரம் போல வேலை செய்யப்புகுந்தான்.

நாளடைவில் அவன் தேகாரோக்யம் கெட்டுப் போய்விட்டது. சண்டையின் மும்முறத்தையும் ஆயிரக் கணக்கில் மக்கள் மடிவதையும் அங்கஹீன மாவதையும் கண்டு மனந் தாளாது ஏதோ

ஒருவிதமாக ப்ரமை கொண்டவன் போல மாறி வெகு விரைவிலேயே ஹிருதயக் கோளாறினல் உயிரும் துறந்து விட்டான்.

பணம்! பணம்! என்று ஆசையுற்று ஓர் மனிதனின் ப்ரீதியையும் மன நிலைமையையும் அறியாது அயல் நாட்டுக் கனுப்பி பணம் பெற்றுக்கொண்டு விசாரமற்று இருந்த இரு ஸ்திரீகளும் அம் மனிதனின் மரணச் செய்தி தெரிந்தபின் தத்தளித்துத் துடித்தார்கள். கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வதைப் போல இவர்களின் கதியாகிவிட்டது. பின்னர் முட்டிக்கொண்டு மோதிக்கொண்டு புலம்பியதில் பலன் யாது. சுவர் இருந்தாலல்லவோ சித்திரம் எழுதுவதற்கு. சுவரே இடிந்துவிட்டது. இனி ஜீவனத்திற்கும் அதோ கதியாகிவிட்டது.

மகனின் அன்பை விடப் பணமே பிரதானமாக எண்ணி அனுப்பிய கிழவி இந்த செய்தியைக் கேட்டதும் இடி விழுந்து போய் விட்டாள். மருமகளுடனும் பேரப் பிள்ளையுடனும் தன் சம்மந்தி வீட்டிற்கே போகும்படியான கதி ஏற்பட்டுவிட்டது. மகனை இழந்த பின்னர் மகனின் வேட்டகத்தில் இக் கிழவியை மதிப்பாருண்டா? அவ் வீட்டில் இவளுடைய வாழ்க்கையின் வைபவத்தைக் கூறவேண்டுமா!

தங்கள் மகளே கதி கெட்டு ஒரு மகனுடன் வீட்டிற்கு வந்தால் முதலில் துக்க வைராக்யத்தில் சில தினங்கள் ஆதரிப்பு. பிறகு சிறு சிறு வார்த்தைகள் பிறக்கும். இன்னும் சில தினங்கள் சென்றுல் மெல்ல வீட்டு வேலை செய்யும் நிலைமை ஏற்படும். இப்படியே படிப்படியாக ஏறிக் கடைசியில் அவள் ஓர் கேவலமான வேலைக்காரி போலாகி சிறுமை பட்டு, சீரழிந்து கண்ணீர் பெருகியவாறு ஆகி விடுவதை உலகத்தில் எத்தனையோ இடங்களில் காணலாம்.

அங்ஙன மிருக்க, புருஷனை இழந்த பெண்ணும், அவள் குழந்தையும், அவள் மாமியும் தாயார் வீட்டில் எத்தனை சிறப்பாக சுகப்பட முடியும். சாகரனின் தாயாருக்குத் தாயில்லை. தந்தை மிகவும் கிழவர். அவருடைய மனக் கஷ்டத்தினல் பெண்ணையும் சம்மந்தி

யையும் வீட்டிலேயே வைத்துக்கொண்டார். கிழவரின் மருமகள் வீட்டில் ராஜ்யபாரம் செய்யும் அரசியா யிருந்தபோதிலும் கிழவர் இருக்கையில் அதிகம் கொடுமை செய்ய முடியாதிருந்தாள்.

ஒரு வருடம் முடிவுக்குள்ளேயே கிழவரும் உலகத்தை விட்டு நீங்கிவிட மருமகளின் ஆட்சி மும்முரமாகிவிட்டது. சாகரனுக்கு 7 வயது ஆவதற்குள்ளேயே அவனது பாட்டியாரும் தாயாரும் மாமி மாமனால் பலவித கஷ்டங்களை யனுபவித்துவிட்டுக் கால கதி யடைந்துவிட்டார்கள்.

கேவலம் பாலகனாகிய சாகரனின் கதி பரதேசியினும் பரதேசி யாகிவிட்டது. அவன் வயதில் மிகச் சிறியவன் எனினும் அவனு டைய பிதாவிடம் கொண்டிருந்த பிரீதியை அவன் ஒருபோதும் மறக்கவே இல்லை. அக்கம் பக்கம் உள்ள பெரியவர்களும் அவனு டைய மாமன் மாமியும் அவன் தாயாரையும் பாட்டியையும் கண்ட படி திட்டி பணப்பேயின் அடிமையில் மனிதனை இழந்துவிட்ட பாவிகள் என்று சொல்லித் தூற்றும் வார்த்தைகள் அவன் மனத்தில் தினே தினே பதிந்துவிட்டதால் தன் தாயின் மீதே வெறுப்பும் ஆத் திரமுங் கொண்டு "எம்மா! அப்பாவைத் துரத்திக் கொண்ணுப் புட்டேன்னு எல்லோரும் சொல்கிறார்களே?" என்று கேட்டுவிடு வான்.

தாயாரும் பாட்டியும் இறந்தபிறகு மாமியிடம் சித்திரவதை யனுபவித்து கேவலம் மாட்டுக்காரப் பையனைப் போல மதிக்கப்பட்டு வீடு கட்டுவது முதல் சமயல் வேலை வரையில் சிறு பையனாகிய இவ னையே செய்யும்படியாக விதித்துவிட்டாள்.

சிறு பையன் சுமார் 11 வயது வரையில் இக் கொடுமைகளைச் சகித்து வந்தான். அதற்குமேல் இப் பெண்ணரக்கியிடம் இருந்து அவதிப் படுவதை விட எங்கேனும் குளத்தில் கிணற்றில் விழுந்து மடியலாம் என்ற உறுதியும் வெறுப்பும் உண்டாகிவிட்டன. அதே நோக்கத்துடன் வீட்டை விட்டுச் சொல்லாமல் ஓடிவிட்டான்.

அதுமுதல் பெண்கள் என்றாலே ஒரு விஷம் போல மதித்து தீர வைராக்யமும் மாறாத ஆத்திரமும் கொண்டு 'பெண்களையே மனத்தினாலும் நினைக்கக்கூடாது. கண்ணாலும் பார்க்கக்கூடாது. பெண்களெல்லாம் ராக்ஷஸிகள். பெண்களே மிகக் கொடிய பிறவி. பெண்களென்றால் 'எமன்தான்'...என்றெல்லாம் தனக்குத் தானே நினைத்துக்கொண்டு தன்னையே மாற்றிக்கொண்டு விட்டான்.

11 வயதுக்கு மேல் அவன் வீட்டை விட்டு ஓடி வந்ததும் வெகு நாட்கள் ஒரு வேளைக்குச் சோறும் கிடைக்காமல் திரிந்தான். பல நாள் பட்டினி கிடந்து தவித்தான். பிறகு ஒரு ஓட்டலில் சென்று அங்கு பாத்திரம் தேய்க்கும் வேலையில் அமர்ந்தான். அவன் மகா புத்திசாலியானதால் அவன் ஓட்டல்காரனை சினேகம் செய்து கொண்டு அவன் மூலமாகவே ஓர் இராப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தான்.

நல்ல புத்திசாலி யாகையினால் சிறிய படிப்பே பெரிய படிப்பாகி மிகுந்த உத்தமனாயும் இன்னும் படிக்கவேண்டு மென்கிற அபார ஆவலுடையவனாயு மானான். பல பெரிய மனிதர்களின் சிபார்சு கொண்டு கலாசாலையில் B. A. வரையில் படித்துவிட்டு ஒரு பெரிய பேரி செட்டியாரின் ஷாப்பில் வேலை பார்த்தான்.

செட்டியாரின் சினேகிதத்திற்கு மிகுந்த பாத்திரமாகி விட்ட படியினால் இவனே சில காலத்திற்குள் ஷாப்பின் மானேஜராகவு மாகி மாதம் 250 போய் சம்பளத்தில் உயர்த்தப் பட்டான். வயது சற்றேறக்குறைய 30க்கு ஆகிவிட்டது. அவனுக்கு மனமார்ந்த நண்பன் சிவானந்தம் ஒருவன் தான். அவனிடத்தில்தான் உண்மை யான சினேகம் செய்து வந்தான்.

இவ்விருவருக்கும் பெண் விஷயத்தில் மாத்திரம் எப்போதும் அபிப்பிராய பேதம் உண்டு. சதா இது விஷயமாகச் சச்சரவுகள் நடந்துகொண்டே இருக்கும். சாகரன் ஒரு சமயத்திலாவது சற்று சளைத்தவனில்லை. எப்போதும் தனது தீர்மானத்தின் மீதே உறுதி யாக விருப்பான்.

இத்தனை உயர்ந்த நிலைமையில் ஒண்டி வாழ்க்கை நடத்துவது சரியில்லை. எவ்விதமாவது இவனுடைய மனத்தைத் திருப்பி இந்த மூட எண்ணத்தை ஒழிக்கவேண்டும் என்பதே சிவானந்தத்தின் கருத்து. எத்தனையோ விதங்களில் அவன் மனத்தை மாற்றப் பார்த்தான். ஒன்றிலும் பலிக்கவில்லை யாதலால் இம்மாதிரி சூழ்ச்சி செய்யவேண்டுமென்று சிவாநந்தமும் பானுசாமியும் முன்னேற்பாடாகவே இவ்விதம் ஜோடித்திருந்தார்கள். இதை சாகரனறிய மாட்டான்.

சாகரன் நாம் முன்பு கூறியபடியே ஒன்றும் தோன்றுதவனுய் உட்கார்ந்து யோசித்துக்கொண்டே பழங் கதைகளை எல்லாம் எண்ணி எண்ணி மனத்தில் கட்டுக்கடங்காத விசனமும், மனக் கொதிப்பும், ஆத்திரமும் அடைந்து ஓர் பித்தன் போல உட்கார்ந்து விட்டான்.

## 2-வது அதிகாரம்

## தியாகியின் விஜயம்—ஸாகரனின் குழப்பம்

"இந் நகரின் சரித்திரத்திலேயே ஓர் சுதினம்" என்று மக்கள் கொண்டாடவும், சரித்திரக்காரர்கள் வரையவும், வன்மை பொருந்தியவர்கள் கவி சித்திரிக்கவும், பொது மக்கள் ஆநந்த சாகரத்தில் மூழ்கி மெய் மறக்கவும், சிறிய குழந்தைகள் முதல் பெரியவர் வரையில் தம்மை யறியாமல் தம்மை மறந்தே 'மகாத்மா காந்திக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!' என்று ஜே கோஷம் செய்யவுமாக எங்கும் உத்ஸாக மயமான தோற்றமும் குடிகொண்டிருந்தன.

அத்தகைய அருமையான சுதினமாகிய நன்னாள் எது?. மகாத்மா காந்தியடிகள்—த்யாகமூர்த்தியாகிய சத்யசீலன்—சென்

னைக்கு விஜயம் செய்த நாளேயாகும். அன்று சென்னையில் குடிகொண்டிருந்த தேசிய உணர்ச்சியைக் கண்ட மக்களில் வியக்காதோர் கிடையாது. கூட்டங் கூட்டமாயும் திறள் திறளாயும் ஜனங்கள் ஆரவாரம் செய்துகொண்டே ஸென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கிச் செல்லுங்காக்ஷியைக் கூறத்திறமன்று. காலை 5 மணி முதலே கூட்டம் குமிழிவிட்டது.

இத்தகைய உணர்ச்சி மயமான தினத்தில் நம்முடைய சாகரன் மட்டும் தன்னுடைய வீட்டிலேயே தனியறையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். நாம் முன்பு கூறிய பந்தயம் செய்து 25 தினங்கள் மத்தியில் கழிந்துவிட்டன. ஏதோ ஒருவிதமாக யோசித்து மண்டையை உடைத்துக்கொண்டு தன் மனப் போக்கின் படிக்கும் தன்னுடைய பிடிவாதமான தீர்மானத்தின்படிக்கும் மிக்க நம்பிக்கையுடன் ஒரு சிறு கதை எழுதி அதை பல காப்பிகள் எடுத்து பல பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டான். ஆனால் இன்னும் ஒரு இடத்திலிருந்தாவது பதிலோ அல்லது தான் அனுப்பியது திரும்பியோ வரவில்லை. அதையே எதிர் பார்த்துக்கொண்டிருந்தான்.

நாம் மேலே குறிப்பிட்ட புனித தினத்தன்று விடியற்காலம் பானுசாமி, சிவாநந்தம் இருவரும் சாகரன் வீட்டிற்கு வந்து "சாகரா! தயார்தானா! மணியாகிவிட்டதே! எங்கே புறப்படு. ஸ்டேஷனுக்குப் போவோம்'' என்று கூப்பிட்டார்கள்.

சாகரன்.—அடேய்! என்னை நீங்கள் கட்டாயம் செய்யவேண்டாம். நான் ஸ்டேஷனுக்கு வரவில்லை. பெண்கள் கூட்டம் ஏராளமாக மிஞ்சியடிக்கும். அந்த சனியன் எனக்கு வேண்டாம். நான் மகாத்மா காந்தி தங்கும் தனி இடத்திற்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு வருகிறேன். அதற்கான ஏற்பாடும் நான் எனது முதலாளி செட்டியாரிடத்தில் செய்துவிட்டேன்; ஆகையினால் நீங்கள் சென்று வாருங்கள். இதற்குமேல் என்னைத் தொந்தரவு செய்யாதே!—என்று கண்டிப்பாயும் திட்டமாயும் கூறிவிட்டான்.

இதற்குமேல் அவ்விருவரும் தொந்தரவு செய்யாமல் போய்

விட்டார்கள். சாகரனின் வீட்டில் வீடு கூட்டும் வேலையிலிருந்து சமயல் வேலை வரையில் எல்லாம் வேலைக்காரர்கள்தான். வீடு கூட்டுவதற்குக் கூட ஒரு பெண்பிள்ளை கிடையாது. அந்த வேலைக்காரர்கள் எல்லாம் ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டுமென்று லீவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

*     *     *     *

“ஜன நாயகம்” தினசரிப் பத்திரிகை ஆபீஸிலுள்ள கதைப் பகுதி மானேஜர் சாகரனுடைய கதையைப் படிக்க வாரம்பித்தார். கதைப் பகுதியின் கமிட்டியினர் அதைக் கேட்க வாரம்பித்தார்கள்.

## சத் சங்கம்.

### ஓர் சிறு கதை

“மாணுக்கர்களே! நீங்கள் இன்று படித்த பாடங்களை நன்ருக மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். அப்போது தான் படித்த படிப்பின் உண்மையான அழகும் ஆநந்தமுமாகும். இன்று தருமத்தைப் பற்றி உங்களுக்குச் சொன்னேன்: நீங்கள் தருமம் செய்வதையே ஓர் கருமமாகக் கொள்ளவேண்டும். நாம் இம்மையில் செய்யும் தருமம் மறுமையில் நமக்கு வழி காட்டும்.

மாணவர்களே! நீங்கள் கனவிலும் கர்மியாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு விநாடியும் தருமத்திலேயே, கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும்.” என்று உபாத்தியாயர் உபதேசம் செய்தார். இந்த உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு மாணுக்கர்கள் வீடு திரும்பினுர்கள்.

அந்த உபாத்தியாயருக்கு நான்கு பிள்ளைகளும் ஒரு கிழவரான தகப்பனுரும் இருக்கிருர்கள். மனைவி இறந்துவிட்ட கொடுமையினுல் இரண்டாந் தாரம் விவாகம் செய்து கொள்ளவில்லை. ஏனெனில் நான்கு பிள்ளைகள் இருக்கையில்—சொத்து ஒன்று மில்லாமையினுல்—ஓர் பள்ளிக்கூட உபாத்தியாயர்;வருமானமும் அதிகமில்லாதவர்: ஆகையினுல் பெண் கொடுக்கவில்லை. உபாத்தியாயரும் இல்லற வாழ்க்கை வேண்டாம் என்று வெறுத்துவிட்டதால் அவர் தனது வாழ்க்கையைத் தனி வாழ்க்கையாக அமர்த்திக் கொண்டார்,

அவர் தினம் காலேயில் 5 மணிக்கெல்லாம் எழுந்து சமயல் வேலேயைச் செய்துவிட்டு 7 மணி முதல் 9 மணி வரையில் சில பையன்களுக்கு ப்ரைவேட்டு சொல்லிக் கொடுத்துவிட்டு 9லிருந்து 10க்குள் தன் நான்கு பையன்களுக்கும் சாப்பாடு போட்டுவிட்டு பள்ளிக்கூடத்திற்கு தயாராக்கிக்கொண்டு தானும் சாப்பிட்டுவிட்டு கிழவரையும் உபசரித்துவிட்டுத் தன் பாடசாலேக்குச் செல்வார்.

இவ்விதமாக அவருடைய வாழ்க்கை நடந்து வருகிறது. சில தினங்கள் பாடசாலே மாணுக்கர்களே இயற்கை யழகைப் பார்க்கும் பொருட்டு பெரிய மலேகள், ஏரிகள், தோப்புக்கள், கோயில்கள், உள்ள இடங்களுக்கு அழைத்துக்கொண்டு செல்வது வழக்கம்.

அம்மாதிரியே ஒரு தினம் மாணுக்கர்களே அழைத்துக் கொண்டு ஒரு ஊருக்குச் சென்ருர். அங்குள்ள மலேயையும் சுனே யையும் இயற்கை யழகையும் கண்டு மாணவர்களெல்லாம் களித்து மகிழ்ந்து பெருமிதமான சந்தோஷமடைந்து தாண்டவம் செய் தார்கள். சிலர் அழகாகப் பாட வாரம்பித்தார்கள். சிலர் ஓட்டப் பந்தயம் வைத்து விளேயாட வாரம்பித்தார்கள்.

பின்னர் தாம் தயாரித்துக்கொண்டு வந்திருந்த சாப்பாடுகள் பலகாரங்கள் முதலியவைகளே தண்ணீர்க் கரையிலமர்ந்து ஆநந்த மாகவும் சுவையுடனும் உண்டு களித்தார்கள். அதன் பிறகு அந்த ஊரில் ஓர் சாமியார் இருக்கிருர் என்பதைக் கேள்விப்பட்ட இந்த உபாத்தியாயர் மாணுக்கர்களே அவரிடம் அழைத்துக்கொண்டு போனுர்.

ஸ்வாமியாரது மடத்தின் வாசலில் தடபுடலான கூட்டங்க ளும் பாராக்களும் தர்பார் போல விருந்தன. இந்த உபாத்தியாயர் தமது மாணுக்கர்களே நோக்கி “பிள்ளேகளே! இந்த ஸ்வாமி சாமா னியரல்ல. பெரிய மகானுபாவர்; நிபுணர். பெரிய த்யாகி; இவ் வுலகத்தையே வெறுத்த பரம யோகி! இவர் மழை பெய்யென்ருல் பெய்யும். வெய்யில் காய் என்ருல் காயும். கடவுளே நேரில் அறிந் தவர். ஆகையினுல் இத்தகைய சிரேஷ்டமான முனிவரை தரிசித்து

அவருடைய ஆசியைப் பெறுவது முக்யமாகும்'' என்று உபதேசம் செய்தவாறு உள்ளே அழைத்துச் சென்றார்.

உள்ளுக்குள்ளேயோ சாமியாரைக் காண்பதற்காக அளவற்ற ஜனங்கள் குமிழி இருந்தார்கள். ஸ்வாமியார் ஓர் திண்டு திமாசு முதலியன அட்டகாஸமாகப் போட்டுக்கொண்டு அதில் சாய்ந்து கொண்டு கையில் பஞ்சாங்கம் வைத்துக்கொண்டு யார், யார் என்னென்ன கேட்கிறார்களோ அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டும் காணிக்கைகள் வாங்கி பையை நிரப்பிக்கொண்டும் இருந்தார்.

உபாத்தியாயர் அத்தகைய சாமியாரை வந்து தரிசனம் செய்துவிட்டு மரியாதையாக மாணுக்கர்களையும் தரிசிக்கச் செய்து விட்டு நின்றார். சாமியாரின் அனுக்ரகத்திற்குப் பாத்திரமாகும் பொருட்டு தன் விஷயமாகவும் சில ஜோஸியங்களைக் கேட்டார்.

சாமியார் சாவதானமாக "ஓய்! உபாத்தியாயரே! உம்முடைய பிறவி என் கண் முன்பு தாண்டவமாடுகிறது. போன ஜென்மத்தில் நீர் பெரிய தனவந்தராகப் பிறந்திருந்தீர். ஆனால் பைசா கூட தானமோ தருமமோ செய்யாத மகா கருமியாக இருந்தீர். உம்முடைய சொத்துக்கள் பூராவும் அனியாயமான விஷயத்தில் சம்பாதித்ததாகையினால் உம்முடைய பெர்ருளை கொள்ளைக்காரன் கொண்டு போய்விட்டான். அதன்பிறகுதான் உமக்கு சற்று புத்தி வந்தது. பிறகு தான் கல்வி யறிவும் சிறிது அறிய வாரம்பித்தீர்கள்.

அந்த வாசனையினால்தான் இஜ் ஜென்மத்தில் இம்மாதிரி கல்வியை போதிக்கும் உபாத்தியாயராகப் பிறந்திருக்கிறீர். இன்னும் கூடிய சீக்கிரத்தில் உம்முடைய ஜாதகத்திற்குப் பெரிய யோகம் உண்டாகப் போகிறது. அப்போது எல்லாக் குறைகளும் தீர்ந்து விடும்.'' என்று ஜோஸியத்தைக் கூறிவிட்டுக் கையை நீட்டினார்.

உபாத்தியாயரின் கையிலோ பணமில்லை. அவர் மகா ஏழை; பெரிய குடும்பி யாதலால் எங்கிருந்து காணிக்கைகள் கொடுக்கப் படும். 'என்னிடம் ஒன்றுமில்லையே' என்று கையை விரித்துப் பரி

தாபமாக விழித்தார். இதைக் கண்ட சாமியார் நகைத்துக்கொண்டே எனக்காகவா நான் காணிக்கைகள் கேட்கிறேன். அம்மாளுக்கு! ஜகதீச்வரிக்கு! சாக்ஷாத் லோக மாதாவுக்கு'' என்று அழுத்தமாயும் ஓர் மாதிரியான பார்வையுடனும் கூறினர்.

உபாத்தியாயரின் கையிலோ ஒன்றுமே இல்லை. என்ன செய்வார்! திருகத் திருக விழித்தார். அச்சமயம் சாமியாரின் பக்கலில் இருந்த ஒருவர்"அதோ உமது கைக் கடியாரத்தின் மீது அம்பாளின் பார்வை விழுகிறது. உமது ஜேபியிலுள்ள...''என்று முடிப்பதற்குள் உபாத்தியாயருக்கு பயம் உண்டாகிவிட்டது. உடனே ஜேபியில் உள்ள ஊராரது பணத்தையும் கேட்டுவிடப் போகிருரே என்கிற பயத்தினுல் 'நமது போதாக் காலத்திற்குத்தான் நாம் இங்கு வந்தோம்' என்று மனத்தை நொந்துகொண்டு கைக் கடியாரத்தைக் கழட்டி வைத்துவிட்டுத் திரும்பிப் பாராமல் போய்விட்டார்.

பின்னும் சில தினங்கள் சென்றன. தமது பாடசாலை மாணவரில் ஒருவருடைய பிதா ஒரு தினம் உபாத்தியாயரிடம் தன் மகன் படிப்பு சம்மந்தமாகப் பேச வந்திருந்தபோது அவர் கையில் உபாத்தியாயர் முன்பு சாமியாருக்குக் கொடுத்த கடியாரம் கட்டி இருந்ததைப் பார்த்து உபாத்தியாயர் பிரமித்துத் திடுக்கிட்டார். அது தன்னுடையதுதானுவென்று நன்ருகக் கவனித்து சில அடையாளங்களினுல் அது தன்னுடையதுதான் என்பது தெரிந்ததும் வியப்போடு "ஐயா! இந்த கடியாரம் வெகு நன்ருக இருக்கிறதே! இதை எங்கே வாங்கினீர்கள்?'' என்று கேட்டார்.

இதைக் கேட்ட அம்மனிதர் இதை நான் சமீபத்தில்தான் சாமி & கோ., என்கிற கம்பெனியில் வாங்கினேன். அந்த கம்பெனியில் அடிக்கடி பழய சாமான்கள் வந்து விற்கும். அதில் இந்த கடியாரமும் இருந்தது. 10 ரூபாயிக்கு நான் இதை வாங்கினேன். வெகு பேர்கள் இதை மிகவும் நன்ருக இருக்கிறதென்று சொன்ஞர்கள்.'' என்று பெருமையாகப் பேசினர்.

இதைக் கேட்ட வாத்தியாருக்கு உண்மை விளங்கிவிட்டது.

"இந்த சாமியார் உண்மைச் சாமியாரல்ல. ஊரை ஏமாற்றி மோசம் செய்யும் சாமியார்தான். இம்மாதிரி பலரிடம் பல சாமான்களை வாங்கி சாமி & கோ என்கிற பெயரால் வியாபாரம் செய்யும் ஊர்ப் பெருச்சாளி போல விருக்கிறது. அடாடா! இப்படியும் ஏமாறு வேனு?" என்று தனக்குள் விஷயத்தைத் தெரிந்துகொண்டு "உலகம் இப்படித்தானு! இந்த மோச மயக்கிற்கா உலகம் அடிமையாகிவிட்டது!"...என்று எண்ணி விஷயத்தை வந்தவரிடமும் கூறினர். அவரும் வியப்புற்ருர்.

முற்றிற்று.

---

## 3-வது அதிகாரம்

## வாழாவெட்டி

மேற்படி கதையைப் படித்து முடித்த மானேஜர் கடகட வென்று பெரிதாக நகைத்தார். அதைப் பற்றி தமது சகாக்களுடன் பலத்த விவாதங்கள் நடத்திப் பின்னர் அதற்கு ஓர் பெரிய மதிப்புரையும் கடிதமும் அப்போதே எழுதி சாகரனுக்கு அனுப்பிவிட்டு மற்ற கதைகளைப் புரட்டிக்கொண்டே செல்கையில் நமது சிவாநந்தத்தின் சிறு கதை கிடைத்தது. வாழாவெட்டி என்ற கதையின் பெயரைப் பார்க்கும் போதே இவர்களுடைய கவனத்தை அக்கதை இழுத்தது. அதையும் ஊக்கத்துடன் படிக்கத் தொடங்கினர். முன்போலவே கமிட்டியார் கேட்கலானுர்கள்.

## வாழாவெட்டி

### ஓர் சிறு கதை.

"மீனுக்ஷி! சதாகாலமும் இப்படியே கண்ணும் கண்ணீருமாக விருந்தால் என்ன செய்வது? உன் தலைவிதி யது. எழுந்திரு.

சாப்பிட வாம்மா!'' என்று ஒரு கிழவி ஓர் இளம்பிராயத்துப் பெண்ணை நோக்கிக் கூறினாள். மின்னல் கொடி போன்றும் மேகத்தினிடை மறைந்தொளிரும். சந்திர பிம்பத்தைப் போன்றும் பிரகாசிக்கும் மீனாக்ஷி கண்ணீர் பெருகியவாறு "பாட்டி! எனக்கு என்ன கேடு? சாப்பிடாமலும் பட்டினி கிடந்தும் நான் சாகப்போகிறேனா என்ன? அப்படிப்பட்ட நல்ல பிராணனாயின் என்னுயிர் என்றோ நீங்கி இருக்காதா!

பாட்டீ! என்னை என் மாமி என் புருஷன் கண்ணிலேயே படக்கூடாதென்று பழி கூறித் தள்ளிவைத்து மகனுக்கு இரண்டாம் விவாகம் நடத்திவிட்டாளே! இந்த கொடுமை எந்த சமூகத்திலாவது நடக்குமா! எந்த தேசத்திலாவது நடக்குமா! நான் ஒரு பரதேசி. தூர தேசத்து வாசி. எனது 6 வயதில் விவாக மாகிவிட்ட பொம்மைக் கலியாணத்திற்குப் பிறகு என் புருஷனை நான் கண்ணாலும் பார்க்கவில்லை. கல்யாண காலத்திலேயே சண்டையும் தகராறும் உண்டாகிவிட்டதாம். என் மாமனாரும் என் தகப்பனாரும் அடிதடி சண்டையும் செய்தார்களாம்.

மத்தியிலுள்ள கலகக் கொள்ளிகளின் செய்கையினால் வாய் வார்த்தை விபரீத சண்டையாக மாறி 5 நாள் கல்யாணமும் ஒழுங்காக முடியாமல் பாதியிலேயே அப சகுனம் போல கல்யாணத்தை நிறுத்திவிட்டு மூட்டை கட்டிக்கொண்டு போய்விட்டார்களாம். நான் 6 வயது சிறுமி என்றால் எனக்கு என்னதான் தெரியும்? சொப்பனம் கண்டது போன்று நினைவிருக்கிறது.

பலத்த சண்டையும் பூசலும் நடத்திவிட்டுச் சண்டையுடன் சென்றவர்கள் பிறகு திரும்பியே பார்க்கவில்லையாம். என் கணவருக்கும் வயது அப்போது 12தான். அவரும் சிறு வயது ஆகையினால் விவகாரமறிய எப்படி சக்தி பெற்றிருக்கக்கூடும்? எனக்கோ ஒன்றுமே தெரியாது. நான் எனது யுக்த வயதை யடைந்தபிறகே எனது சரித்திரத்தின் அவகேட்டை 'யறிந்து அலறினேன். என் வாழ்நாளையே பாழாக்கிவிட்டீர்களே! என் பிறவியே வியர்த்தமும் பூபாரமுமாக ஆய்விட்டதே! பாழும் சண்டையிட்டபோதே என்னை

யும் கொலை செய்திருக்கலாகாதா! என்னை யேன் வளரச்செய்தீர்கள்? 6 வயது பொம்மைக் கல்யாணத்தை மட்டும் ஏன் செய்தீர்கள்? என் மனமும் வயிறும் பற்றி எரிகிறதே!'' என்று முட்டிக்கொண்டேன். பிறகு என்ன செய்துதான் என்ன பலன்? எல்லாம் சமுத்திரத்தில் சர்க்கரை கரைத்தது போலாகிவிட்டது.

என் பிறவியை நான் நினைக்கும்போது என் கண் முன்பு வெகு பயங்கரமான உருவமே தோன்றி என்னை முற்றிலும் கொன்று வதைத்தது. கால தேவதையின் சக்கரம் பயங்கரமாக என்னை நோக்கிச் சுழன்றது. நான் என்ன செய்வதென்றே எனக்குப் புலப் படவில்லை. பலவாறு குழம்பிப்போய் தவித்துவிட்டேன். என் தாயாரிடத்தில் முறையிட்டேன். என்னை எப்படியாவது என் கணவரிடம் சேர்த்துவிடுங்கள்'' என்று கதறினேன்.

என் தாயாரும் "தந்தையினுடைய சண்டையின் மும்முர கோபத்தினால் சிதறிவிட்ட சம்மந்தம் இனி ஒட்டாது. அப்போதே அவர்கள் உன் புருஷனுக்கு இரண்டாந் தரம் விவாகம் செய்துவிட் டார்கள்.'' என்று கூறிவிட்டார்கள். அந்தோ! இதைக் கேட்ட பிறகு நான் என்ன நிலைமையைத்தா னடைந்திருப்பேன். இனி உயிருடன் இருப்பது கூடாதென்று தற்கொலை புரிந்து கொள்ள நினைத்தேன். கிணற்றில் விழுந்தேன்; நஞ்சும் உண்டேன்.

நான் மகா பாவி என்பது இம் மூன்றிலும் சாகாமல் பிழைத் துக் கொண்டதிலிருந்தே தெரியவில்லையா? "இது என் தலைவிதி! இதற்கு யார்மீது நோவதிலும் பயனில்லை. என் விதிதான் எல்லோ ரையும் பிடித்து ஆட்டுகிறது.'' என்று உணர்ந்தேன். "வாழா வெட்டி என்கிற பெயருடன் சாகவேண்டுமென்று சாகசம் செய் தாளே! இறந்தாளா! இறப்பது இவள் கையிலா இருக்கிறது. இன் னும் எத்தனை லோல் படவேண்டுமோ பாவம்!''...என்று ஊரார் பரிகஸிக்கவும் தொடங்கினர்கள்.

என் விஷயத்தில் எமனும் விரோதியே யாகிவிட்டான். நான் என்ன செய்வேன்? மனமோ அளிந்த புண்ணாகிவிட்டது. வீட்டி

னுள்ளோருக்கு அடிமையாகி ஓர் ஊழியக்காரி போலானேன். பெற்றோரின் சண்டையினாலேயே என் கதி இவ்விதமாகியும் அவர்களாலும், அண்ணன், தம்பிகள், அண்ணன் மனைவிமார்கள் முதலியோரால் நான் புழுவிற்குச் சமானமாக மதிக்கப் பெற்றேன். அதன் மூலம் எத்தனை விதமான கஷ்டங்கள் உண்டோ அத்தனையும் அனுபவித்தேன்.

கடைசியில் பலன் என்ன! ஒன்றுமே இல்லை. இங்கும் ஒதுக்கப்பட்டவள். அங்கும் நீக்கப்பட்டவள். மத்தியில் எனது வாழ்க்கையின் நிலைமை எங்ஙன மிருக்குமென்று கூறவேண்டுமா? என் புருஷன் என்ற மகானுபாவனை அந்த அலங்கோல கல்யாண காலத்தில் பார்த்தது சற்றும் ஞாபகமே இல்லை. அவருடைய முகத்தையாவது கண்டு களிப்பதற்கு எனக்கு பாக்யமே கிடைக்காது போய் விட்டது.

பெற்றோரிடமும் பிறந்தோரிடமுமே அடிமை வாழ்க்கை வாழ்வதை விடப் பிறரிடம் அடிமையாக விருந்து காலத்தைக் கடத்தலாமே என்றும் தைரியம் உண்டாகியது. என்ன செய்வதென்று வகையறியாது தவித்தேன். இதன் மத்தியில் தாயும் தந்தையும் பரலோகம் போய்விட்டார்கள். பெற்றோர்கள் இருக்கும்போதே பட்ட சிறுமைகள் போதும். இனிமேல் கேட்கவேண்டுமா ?

பாட்டி! என்னுடைய பிறவியே பாழாகிவிட்டது. இனி இக்கட்டை எக்கதியானால் என்ன என்ற வெறுப்பும் மனக் கசப்பும் ஏற்பட்டுவிட்டதால் வீட்டில் அண்ணனிடம் சொல்லி விடை பெற்றுக்கொண்டு, வீட்டில் குடி இருந்த பாட்டி யாத்திரை கிளம்பினாள்; அவளோடு நானும் சென்றேன்.

முல்லையூர் என்ற க்ஷேத்திரத்தில் முருகக் கடவுளை தரிசிக்கச் சென்றோம். அந்த ஊரில் ஓர் புண்ணியத் தாயார் தமது பெருந்திரளான செல்வத்தை கல்விக்குப் பயன் படுத்த எண்ணி அவ்வூரில் ஓர் தர்ம வித்யாலயம் ஸ்தாபனம் செய்திருந்தார்கள். அந்த மகிமையை

கேள்வியுற்று அங்கு சென்று அந்த அதிகாரியம்மாளின் சிபார்சைப் பெற்று அந்த ஆசிரமத்தில் நானும் படிக்கச் சேர்ந்தேன்.

ஏற்கெனவே எனக்குத் தெரிந்த படிப்புடன் சுமார் 7 வருட காலம் அங்கு வெகு அக்கரையுடன் படித்து சில பரீக்ஷைகளில் தேறினேன். அதன் பிறகு அங்கிருந்து என்னை அவர்களே ஓர் ஜெமீந்தார் வீட்டுப் பெண்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் உத்யோகத்திற்கு சிபார்சு செய்து அனுப்பினார்கள்.

நானும் மிக்க சந்தோஷத்துடன் அன்று முதல் இன்றுவரை யில் அந்த ஜெமீந்தார் வீட்டிலேயே பெண்களுக்கு படிப்பு, தையல் வேலைகள் முதலியன சொல்லிக்கொடுத்து மாதம் 40 ரூபாய் சம்ப ளம் பெற்று வருகிறேன். என் ஒரு சாண் வயிற்றிற்கு ஒரு வேளை புசிப்பதும், ஒரு வேளை வெறுமனே கிடப்பதுமாக விருக்கிறேன்.

எனக்கு சம்பாத்தியமும் கலவரமும் ஏற்பட்டதை யறிந்த அண்ணன், அண்ணி முதலியோர் விழுந்து விழுந்து என்னை யழைக் கின்றார்கள். முன்பு லக்ஷ்யமற்ற கட்டையா யிருந்த நானே கையில் காசு நடமாடும் வேலை கிடைத்து விட்டதென்றால் மதிப்புடன் பிர காசித்துவிட்டேனா?...போதும் போதும்: இனிமேலும் அம்மாதிரி வாழ்க்கையே வேண்டாம். என் காலத்தை இப்படியே கடத்திவிட எண்ணி மறுத்துவிட்டேன். இதுதான் பாட்டி எனது பிறவிச் சரிதை...இன்னும் என் புருஷன் யாரென்று எனக்குத் தெரியாது" ...என்று விசனித்தாள்.

• இதைக் கேட்ட கிழவி, "என்ன விசித்திரமான சம்பவம்!... நான் உன் வருத்தத்திற்குக் காரணம் யாதோ வென்று நினைத்தேன். இத்தனை துக்ககரமானதா உன் சரிதம்...சீச்சீ! கல்யாணத்தில் சண் டைகள் வந்தாலும் பெரியாரின் பொல்லாப்பினால் சிறு பெண்ணாகிய உன்னை சந்தியில் விட்டது தருமமா! சீச்சீ! இது மிக்க அக்ரமம்! அனியாயம்!...உம்...விதி விதி என்று சொல்லிக்கொண்டே மனி தர்கள் செய்யும் சதி பெரும் பாதகமாக விருக்கிறது. உம்; நீ எழுந் திரும்மா! நான் கிழக்கட்டை என்ன செய்யப் போகிறேன். என்ன

சொல்லப் போகிறேன்?'' என்று கண்ணீர் உதிர்த்தாள். சில நாட்கள் சென்றன.

*　　*　　*

ஒரு உத்யோகஸ்தர் தமது உத்யோகத்தின் நிமித்தம் பத்மபுரிக்கு வநதார். அவர் இந்த ஜெமீந்தாரின் பங்களாவில் விருந்தாளியாக அழைக்கப்பட்டு இவ்விடம் தங்கினர். ஜெமீந்தாரின் மகனும் வந்த விருந்தாளியும் சாப்பிட்டுவிட்டு தாம்பூலம் தரித்துக் கொண்டே சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்கடுத்த அறையில் ஜெமீந்தார் வீட்டின் உடைகளை தையல் மிஷினில் நமது மீனுக்ஷி தைத்துக்கொண்டும், கத்தரித்துக் கொண்டு யிருந்தாள். அப்போது அகஸ்மாத்தாக விருந்தாளியின் குரலில்...''ஆமாம் சார்! அது 6 வயது பொம்மைக் கல்யாண விஷயம். யாருக்கு நினைவிருக்கிறது?'' என்ற வார்த்தைகள் அவள் காதில் பட்டதும் திடுக்கிட்டு துணிகளைப் போட்டுவிட்டு எழுந்து வந்து கதவருகில் நின்று இடுக்கின் வழியினல் எட்டிப் பார்த்தாள்.

மன்மத ஸ்வரூபம் போன்றும் கம்பீரமான தோற்றத்துடனும் விருந்தாளியாகிய துரைராஜா என்பவர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

ஜெமீந்தார்:—உலகம் பலவிதம்! உண்மை எதுவும் தெரிவதில்லை. கல்யாணத்திற்கு வேண்டிய சகல காரியங்களும் முடிந்து கல்யாணமும் நடந்து தாலி கட்டிய பிறகு இப்படியொரு சண்டை வருமோ! உங்கள் பிதாவின் அழைப்பிற்காக நானும் வந்திருந்தேன். நீ சிறு பிள்ளை......ஆமாம். அந்தப் பெண் இறந்துவிட்டாள் என்று சிலர் சொல்கிருர்கள். இன்னும் சிலர் அந்தப் பெண் ஓடிவிட்டாள் என்றும்,கெட்டுவிட்டாள் என்றும், ஏதோ நாடகத்தில் நடிப்பதாயும் எத்தனையோ சொல்லுகிருர்கள். யாருக்கு உண்மை தெரியும். உமக்கு ஒன்றுமே தெரியாதா!

துரைராஜா:—சார்! அவ் விஷயங்கள் இப்போது வேண்டாம்! பூர்வ ஜன்மாந்திரத்துக் கருமங்களை அனுபவித்துத்தானே தீர

வேண்டும். உண்மை எதுவோ, பொய் எதுவோ! என் தாய் தந்தையரின் கொடுமையினுலும், அந்தப் பெண்ணினுடைய பெற்றோரின் கொடுமையினுலும் ஒரு பெண்ணின் பிறவி பாழாகிவிட்டது. இதை யார்தான் ஒப்பமுடியும். எல்லாம் காலவிதி'' என்று கூறும்போது அவனை யாரோ அழைப்பதாக ஆள் வந்தான். உடனே எழுந்து போய்விட்டான்.

கதவினிடுக்கிலிருந்து பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டுமிருந்த நமது வனிதாமணியின் நிலைமையைக் கூறவேண்டுமா! ஹா! இவரா நமது ப்ராணகாந்தர்! இவருக்கா நான் மாலை சூட்டி வாழ்க்கைப்பட்டேன். என்ன இது! நான் கண்டதும் கேட்டதும் உண்மையான காக்ஷியா? என்னுடைய ப்ராணநாதரா இவ் விருந்தாளி.... என்ன ஆச்சரியம்! என்னே மன மகிழ்ச்சி!'' என்று தனக்குள் தவித்தாள். நிலை கலங்கித் தத்தளித்தாள். நான்தான் உமது மனைவி என்று சொல்லிவிடலாமா வென்று நினைத்தாள்.

ஹா!...அம் மாதிரி சொல்வதால் என்ன பயன்!...என்பேரில் அடாத பழியும், தகாத உரையும், நான் கெட்டுவிட்டவள் என்று உலகம் கூறுவதாக ஓர் காற்று உலாவுவதாகத் தெரிகின்றதே! இதென்ன அக்ரமம்! இந்த ஜெமீந்தாரே அந்த அனியாயத்தையுங் கூறி இருக்கிறரே! இது போன்று அவர் மனத்தில் இன்னும் எத்தனை விஷயங்களைக் கட்டுக்கதையாக்கிச் சொல்லி இருக்கிறர்களோ தெரியவில்லையே!...ஆம்......ஆம்...இப்படித்தான் செய்யவேண்டும். திடீரென்று சொல்வதில் உபயோகமில்லை......என்று தனக்குள் ஓர் முடிவுக்கு வந்தாள்.

* * * *

துரைராஜாவுக்கு சற்றும் எதிர்பாராவிதமாக ஜுரம் வந்துவிட்டது. அசாத்யமாக அடிக்கிறது. அவர் ஜெமீந்தார் வீட்டிலேயே ஒரு அறையில் படுத்துவிட்டார். ஜெமீந்தாரின் டாக்டர் வந்து பார்த்துவிட்டு "ஜுரம் கடுமையாகவிருக்கிறது. ஓயாமல் ஐஸ் வைக்கவேண்டும். நர்ஸ் ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

182982

இதை தூரத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மீனுக்ஷியின் தலையில் இடி இடித்ததுபோலாகிவிட்டது. "ஐயோ! மகா பாவி நான் வந்து பார்த்ததனுலேதான் இத்தகைய உடம்புக்கு வந்துவிட்டதோ!" வென்று கலங்கினுள். தன்னுடைய ரகஸியத்தை இச் சமயம் சொல்லவும் தியங்கி யோசித்தாள்...உடனே அவள் ஜெமீந்தாரின் எதிரில் தைரியமாகச் சென்று "ஐயா! தாங்கள் வீணுகச் செலவு செய்து நர்ஸ் வைக்கவேண்டாம். அக்காரியத்தை நானே செய்கிறேன். எனக்கு நர்ஸ் வேலையும் ஆசிரமத்தில் செய்து பழக்கமிருப்பதால் தாங்கள் அவ் வேலையை அடியாளிடமே கொடுக்கவேண்டும்" என்று கேட்டாள்.

பணத்தின் மீதே புரளுகின்றவர்களாயினும் பணச்செலவு செய்ய மனம் வராது. அதோடு சிக்கனமாக பணத்தை மிச்சம் செய்ய வழி சொல்கையில் அதை ஏன் வேண்டாமென்று சொல்வாரா! உடனே அதற்குச் சம்மதித்துவிட்டார். மீனுக்ஷி அசல் நர்ஸைப் போலவே உடை அணிந்துகொண்டு தன்னுருயிர்க் கணவனின் பக்கலில் சென்று ஐஸை வைக்கத் தொடங்கினுள்.

மனமோ சொல்லவறியாத பலவித எண்ணங்களாலும்,வேதனையினுலும் தத்தளிக்கின்றது. ஐஸை வைத்துக்கொண்டு ஓயாமல் கடவுளை வேண்டிக்கொண்டே இருக்கிருள். உடம்பு வலி என்று ஹா, ஊ வெனக் கத்தும் தன் கணவனின் தேகத்தை மெதுவாகப் பிடித்துவிட்டும் ஒற்றிடங்கள் கொடுத்தும் வேளாவேளைக்கு ஆகாரமும் மருந்துகளும் கணக்குத் தவருகாதபடிக் கொடுத்து அவர் வாந்திசெய்யும்போதெல்லாம் தூக்கித் தன்மீது ஒரு கையினுல் தாங்கிக்கொண்டு மற்றொரு கையினுல் தடவிக்கொடுப்பதும்,அவ்வப்போது படுக்கைகளை மாற்றி சுத்தமாகப் போடுவதும் அவ்வறையைப் பெருக்கி வெகு பரிசுத்தமாக வைத்திருப்பதும் அவ்வறையின் சமீபத்திலேயே ஆகாரம் தானே தயார் செய்து கொடுப்பதும் இரவு பகல் கண் விழித்து பெற்ற அன்னையை விடப் பதின்மடங்கு அதிகரித்த அன்பும் கரைகாணு ப்ரேமையும் கருத்துங்கொண்டு மீனுக்ஷி செய்யும் பணிவிடைகளைக் கண்டு ஜெமீந்தார் வீட்டினரே பிரமித்தார்கள்.

திரைராஜா இவளை ஓர் நர்ஸாகவே எண்ணி அவனும் அளப்பரிய ஆச்சரியத்தை யடைந்து சந்தோஷித்தான்.

சுமார் ஒரு வார காலம் தான் கனவிலும் நினையாதபடிக்குத் தன் கணவனுக்கு சேவை செய்யும் பாக்கியம் தனக்குக் கிடைத்த தைப்பற்றி கட்டுமீறிய களிப்புடன் தன் பிறவியிலேயே ஓர் உன்னத யோகம் கிடைத்துவிட்டது போல மகிழ்ந்தாள். இப்படி ஓர் ஊழி யக்காரிபோன்று சேவை செய்யும் பாக்கியமாவது தனக்குக் கிடைத் தால் போதும் என்று மனமாறக் கடவுளைப் பிரார்த்தித்தாள்.

துரைராஜனுக்கு உடம்பு சிறிது குணமாகிவிட்டதால் அவன் தன் அலுவல்களை கவனிக்க ஊருக்குக் கிளம்பினான். தன்னுடைய விஷயத்தில் இரவு பகலாக அரும் பாடு பட்டு கண்விழித்துக் கருத் துடன் அன்னையைப்போல் கவனித்துவந்த மீனாக்ஷியின் செய்கையை என்றும் மறக்கவே முடியாதவனானான். தனக்கு உழைத்த அந்த உத்தமிக்கு தான் நிறைய சன்மானங் கொடுக்க எண்ணினான்.

மீனாக்ஷியை அழைத்து "அம்மணீ! நான் உங்களுடைய உபகார உழைப்பை என்றும் மறக்கமாட்டேன். நான் ஊருக்குப் போய்வருகிறேன். இதோ இந்த கவரை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று ஒரு கவரைக் கொடுத்துவிட்டு பதிலுக்கு நிற்காமல் போய் விட்டான்.

மீனாக்ஷிக்கு இந்த செய்கை மிக்க வியப்பையும் அடக்க முடி யாத ஆச்சரியத்தையுங் கொடுத்தது. உடனே அவள் அக் கவரை உடைத்துப் பார்த்தாள். அதில் ஒரு கடிதமும் 100 ரூபாயிக்கு ஒரு செக்கும் இருக்கக் கண்டு மெய்மறந்தாள். கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

"அன்புமிக்க அம்மணீ!

நான் தாங்கள் செய்த பேருதவிக்காக என்ன கைம்மாறு செய்வதென்றே தெரியாமல் விழிக்கின்றேன். நான் பலதரம் நோய் வாய்ப்பட்டுப் படுத்ததுண்டு. என்னைப் பெற்ற அன்னையும் இரவு கண் விழிக்கும் விஷயத்திலும் அடிக்கடி ஒத்தடம் முதலி

யன கொடுக்கும் விஷயத்திலும் சில வேளை சலித்துக்கொண்டு பேசியது என்னிதயத்தில் இப்போதுமிருக்கிறது.

பிறகு மனைவி ஏற்பட்டுச் செய்யுங்காலத்தில் மருந்தையும் ஆகாரத்தையும் நானே அருகில் வைத்துக்கொண்டு சாப்பிடுகிற நாட்களும் பல உண்டு. அதிகமாகிவிட்ட காலத்தில் தாதியும் வைத்ததுண்டு; ஆஸ்பத்திரியிலும் கிடந்ததுண்டு. ஆஸ்பத்திரியில் தாதியைத் தேடியழைக்கச் சில சமயங்களில் மற்றோர் ஆள் தேவையாக இருந்ததையும் நான் மறக்கவில்லை. வீட்டிலிருந்த தாதிக்கு வேளை தவறாது ஆகாரம் செய்து அவளை திருப்தி செய்வதற்குள் என் வீட்டார் திணறிவிட்டதோடு இராக்காலத்தில் அந்த தாதியை எழுப்புவதற்கு மற்றொருவர் கண் விழிப்பு அத்யாவச்யமாயிருந்தது.

அம்மணி! இந்த மாதிரி உங்களைப் போன்று உபகாரம் செய்தவர்களை நான் என் வாழ்நாளில் கண்டதே இல்லை. என்னுடைய உள்ளம் எப்படி பூரிக்கின்றதோ அதைக் கூறச் சக்தியற்றவனாகவிருக்கிறேன்; மன்னிக்கவும். தங்கள் வரலாறுகள் தெரியாதென்றாலும் தங்களை பாரியையாக அடையப் பெற்றவர் பரம புண்ணியசாலி என்றும், தங்களைப் பெற்றோர் மகா பாக்யசாலிகள் என்றும் நம்புகிறேன்.

தாயே! இதோடு உள்ள வெகு சொல்பமான 100 ரூபாயை அங்கீகரிக்கவேண்டும்; அதே என்னுடைய கோரிக்கை. நான் தங்களுக்குக் கொடுத்துவிட்ட சிரமத்திற்கு இதோர் வெகுமதியேயல்ல வென்பதையும் நானறிவேன். மன்னிக்கவும். மீண்டும் சந்திக்க நேர்ந்தால் கட்டாயம் மறக்கமாட்டேன்.

இங்ஙனம்
நன்றியுள்ள
துரைராஜா"

*இதைப் படித்ததும் தன் வாழ்நாளில் தான் என்றுங் கண்டறியாத அபரிமிதமான ஆநந்தத்தையடைந்தாள். தன் கணவனின் கைப்பட கிடைத்த கடிதமானது ஓர் பெரும் இன்பப் புதையல்*

கிடைத்ததுபோன்று தோன்றியது. ஆநந்தக் கூத்தாடினுள்: அக மகிழ்ந்தாள். தான் பகிரங்கமாக என்று தன் கணவனிடம் போய்ச் சேரும் பாக்கியம் கிடைக்குமென்று தபம் செய்யத் தொடங்கினுன்.

துரைராஜா சென்ற சில தினத்திற்குள்ளாகவே ஜமீந்தார் வீட்டினர் மீனுக்ஷியின்மீது சந்தேகங்கொள்ளத தொடங்கிவிட் டார்கள். துரைராஜா விஷயத்தில் இவள் நடந்துகொண்டது பரி சுத்தவதிகளுக் கழகல்ல. இவள் கெட்டுப்போனவள் என்ற எண் ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு வெளிக்குச் சொல்லாமல் ஏதோ சாக்குக் கூறி இவளே வேலைக்கு வேண்டாம் என்று தள்ளி விட்டார்கள்.

தன்மீது பழி சுமத்தித் தள்ளியதை யறியாத மீனுக்ஷி அந்த வீட்டை விட்டுச் சென்று விட்டாள். தான் எப்படித் தன் புருஷ னிடம் போய்ச் சேருவது என்ற பெரிய யோசனேயே அவள் மனத் தில் போராடிக்கொண்டிருந்தது. தன் புருஷன் இருக்கும் ஊருக்கே வந்து அவன் இருக்கும் வீதியிலேயே உள்ள பள்ளிக்கூடத்தில் தன் னுடன் ஆசிரமத்தில் படித்த ஓர் சினேகிதையான கமலா வேலை யாக இருப்பது ஞாபகம் வந்தது.

தன் காரியத்தின் நிமித்தம் பழய சினேகிதையின் உறவைத் தேடிக்கொண்டு அந்த பள்ளிக்கூடத்திற்கு வந்து தன் சினேகிதை யைச் சந்தித்துப் பழய கால வர்த்தமானங்களைப் பேசி அவளுடைய விருந்தாளியாக அமர்ந்தாள். கமலா ஓர் கைம்பெண்ணேயாகையி னல் அவள் தன்னுடைய வயதான தாயாருடன் தனி வாழ்க்கையே நடத்துகிருள். அவளுடன் நமது மீனுக்ஷியும் இருப்பது வெகு பொருத்தமாயும் சந்தோஷமாயுமிருந்தது.

கமலத்துடன் பள்ளிக்கூடத்திற்கு சில வேளைகளில் மீனுக்ஷி யும் வருவாள். துரைராஜாவின் 7 வயது பையனும் 9 வயது பெண் ணும் இந்தப் பள்ளிக்கூடத்தில் படிப்பதை கமலத்தின்மூலமாகத் தெரிந்துகொண்டு அபாரமான சந்தோஷத்தையடைந்தாள். அந்த குழந்தைகளைக் கண்டதும் தன்னே யறியாத ஓர் குதூகலமடைந்

தாள். தன் புருஷனைப் பார்ப்பதுபோன்று அக் குழந்தைகளைப் பார்ப்பதால் அவளுக்குப் பெரிய ஆநந்தம் உண்டாகியது.

துரைராஜனுடைய பெண்ணோ மகா புத்திசாலி; வெகு கெட்டிக்காரி. ஒரு தினம் அந்தப் பெண் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை; மறுநாள் வந்தாள். 'நேற்று ஏன் வரவில்லை?' என்று மீனாக்ஷி கேட்டாள். அதற்கந்த பெண் வெகு தெளிவுடனும் சாமர்த்தியமாயும் 'எங்கள் வீட்டில் நேற்று ஓர் அமர்க்களமாகிவிட்டது. எங்கப்பாவுடைய ஆபீஸ் பேப்பர் முக்யமானதில் எங்கம்மா தெரியாத்தனமாக ஏதோ சாமான் பொட்டணங் கட்டி அழுக்காக்கியும்,கிழித்தும் விட்டாளாம்.

மாமீ! எங்கம்மா சற்று அசடு; ஒன்றுமே தெரியாது. இதனால் எங்கப்பாவுக்கு மிக மிகக் கோபம் வந்துவிட்டது. அந்த பேபர் அத்தனை முக்கியமானதாம்; அதனால் என் தந்தையின் வேலைக்கே ஆபத்து வந்துவிடுமாம். அதற்காக அவர் ஓயாது விசனித்துக் கொண்டு தத்தளிக்கிறார்.'' என்று சொல்லும்போதே மீனாக்ஷிக்கு மிக்க கவலையும் பரிதாபமும் உண்டாகிவிட்டன. சற்று யோசித்தாள்.

உடனே ஒரு யோசனை தோன்றியது. அதாவது மொட்டைக் கடிதம் ஒன்று எழுதி அன்று மாலையே அவனுக்கு நேரில் சேரும்படி அதைத் தபாலில் போட்டுவிட்டாள். அன்று மாலையிலேயே அக்கடிதம் துரைராஜாவுக்குக் கிடைத்தது. அதைப் படிக்கத் துடங்கினான்.

"ஐயா! இது ஓர் மொட்டைக் கடிதமென்று அலக்ஷியம் செய்யவேண்டாம். உம்முடைய மிக்க தத்தளிப்பான சமயத்தை நான் அறிந்து விசனிக்கின்றேன். சிறு துரும்பாயினும் பல் குத்த உதவும் என்பதை மறக்காதீர்கள். தாங்கள் பைஸிகில் வண்டியில் செல்லும் பழக்கமுடையவராகையினால் நான் சொல்லும் யோசனை மிகவும் பொருத்தமானதாக விருக்கும்.

அதாவது:—ஈசனருளால் மழை பெய்துகொண்டிருக்கிறது. நாளைக் காலையில் மழை நின்றுவிட்டாலும் தெருவில் உள்ள

சேறும் தண்ணீரும் காய்ந்துவிட முடியாது. ஆகையினால் நாளைக் காலையில் உங்கள் பேப்பர் கட்டுகளை எல்லாம் சற்று தளர்த்தி யாகக் கட்டி ஸைகிலில் வைத்து மேலே ஜாக்ரதையாக மெழுகு சீலை போட்டு மூடிக்கொண்டு ஸைகிலில் ஆபீசுக்குப் புறப்படும்.

வழியில் எந்த இடத்தில் சற்று பள்ளமாக சேறு தங்கி இருக்கிறதோ அந்த பக்கம் செல்கையில் எதிரிலே சைகலோ, மோட்டாரோ வேறு வண்டியோ வருவதை சமயம் பார்த்திருந்து மோதியபாவமாக வண்டியுடன் கீழே விழுந்துவிடும். இது ஆபத்துமில்லை. அவமானமும் இல்லை. எதிர்பாராது நேர்ந்த விபத்து என்று முடிவாகிவிடும். பேபர்களில் சில சேற்றில் நனைந்து விடும். அப்போது முன்பு அழுக்காகிக் கிழிந்துவிட்டதும் அடி பட்டுவிடும். அதிகாரிகள் விபத்தைக் கண்டு இரங்கிவிடுவார் களேயன்றி குற்றம் வராது. நீரும் அடிபட்டதாக நடிக்க வேண்டும். வண்டிகள் சாக்கு ஒன்றும் கிடைக்கவில்லை என் றால் தலை சுற்றி மயக்கம் வந்ததாக நடித்துச் செய்துவிடுங்கள். இது சரியான பலனைக் கொடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

ஐயா! இந்த அதிகப் பிரஸங்கி யார் என்று எண்ண வேண்டாம். உலகத்தில் ஈசனால் படைக்கப்பட்ட ஜீவகோடி களில் இப் பாவியும் ஒன்றாகும்.

இங்ஙனம்
உங்களது நன்மையைக் கோரும்
.........

*இதைப் படித்ததும் துரைராஜனை ஒரு கலக்கு கலக்கியது. "ஐயயோ! இந்த வெகு ரகஸியமான விஷயம் எப்படி வெளியில் பரவி இருக்கும்? இதை யாரறிந்து இம் மொட்டைக் கடிதம் வரைந் திருக்கிறார்கள்...என்றதுபோன்று பல குழப்பங்களும் யோசனைக ளும் உண்டாகிவிட்டன. கடிதத்தில் கண்டுள்ள யோசனையோ மிக வும் பொருத்தமானதும் பலனைக் கொடுக்கக்கூடியதுமாக விருப்ப தால் இதை யார் தெரிந்து எழுதி இருப்பார்கள் என்று தெரியாது திகைத்தான்......*

"உம்...ஈச்வரோ ரக்ஷது" என்கிறபடி விட்டுவிடவேண்டியதுதான். இனி என்ன எண்ணி என்ன பலன். இக் கையெழுத்தைப் பார்த்தால் ஓர் பெண்மணியுடையதுபோன்று மிருக்கிறது." என்று ஒன்றும் புரியாது சிறிது நேரம் குழம்பிக் கிடந்தான்.

"வேண்டுமென்று யாராவது விரோதிகள் விஷயத்தை யறிந்து கொண்டு நம்மை வீதியில் பத்து பெயருக்கு மத்தியில் விழவைத்து வேடிக்கை பார்க்க இம்மாதிரி குறும்புத்தனமாக எழுதிவிட்டார்களா! அவ்வாறு நமக்கு விரோதிகள் நாம் அறிந்த வரையில் யாருமே இல்லையே!...அப்படிக்கொன்று மிராது. இது ஏதோ அதிசயக் கடிதமாக விருப்பதே யன்றி விஷயம் மிகவும் முக்கியமானதாக விருப்பதால் கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு இம்மாதிரியே செய்து எனது முதல் ஆபத்தைத் தீர்த்துக்கொள்கிறேன்." என்று தனக்குள் ஓர் முடிவுக்கு வந்துவிட்டான்.

மறுதினம் காலையை எதிர்பார்த்தவாறே அக் கடிதத்தைப் பல முறைகள் படித்தான். இதில் விரோத பாவமிருப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் நன்மைக்கு என்கிற உதாரணத்தையே கைக்கொள்வோம் என்று துணிந்துவிட்டான்.

தன் கட்டுகளை ஒருவாறு கட்டி சைகிலில் மேலுடன் கட்டிவிட்டுக் கடவுளைப் ப்ரார்த்தித்தபடியே சைகிலில் ஏறி ஆபீசை நோக்கிச் சென்றான். வழி எல்லாம் சேறும் தண்ணீரும் சதசத வென்று இருந்தன. வெகு கவனமாயும் சமயத்தை எதிர்பார்த்தபடியும் சென்றான்.

அச்சமயம் எதிரில் ஒரு மோட்டார் கார் வேகமாக வந்தது. அதையே சந்தர்ப்பமாகக் கொண்டு சைகிலை சமயம் பார்த்து அந்த காரின் மட்கார்டில் இடித்துத் தான் விழுந்துவிட்டது போல சைகலுடன் சேறில் விழுந்துவிட்டான். சைகிலில் கட்டியிருந்த கட்டும் சேறில் நனைந்துவிட்டது.

வீதியில் இம்மாதிரி ஓர் சம்பவம் நடப்பதென்றால் கும்பு

கூடுவதற்குக் கேட்கவேண்டுமா! அந்த க்ஷணமே கூட்டங் கூடிவிட்டது.

உடனே காரை ப்ரேக்கு போட்டு நிற்க வைத்தார்கள். காருக்குள்ளிருந்த இரண்டு ஸ்திரீகள் வெகு பதைபதைப்புடன் இறங்கி, வண்டியோட்டியைக் கண்டவாறு திட்டியபடியே கீழே விழுந்து கிடக்கும் சைகிலையும், சேறில் விழுந்து உடம்பெல்லாம் சேறும் தண்ணீருமாக நிற்கும் துரைராஜாவையும் கண்டதும் திடுக்கிட்டு நடுங்கி விட்டார்கள்.

வண்டியிலிருந்து இறங்கிய பெரியம்மாள்..."தாங்களா விழுந்து விட்டீர்கள்...ஐயோ! நான் என்ன செய்வேன்? இக் கட்டுகளென்ன ஆபீஸ் கட்டுகளா! ஐயயோ! எனக்கு மிக்க விசனமும் பயமுமாக இருக்கிறதே!"...என்று தவித்தாள்.

அவ் வண்டியில் அவர்களுடன் வந்த மீனாக்ஷி திடீரென்று இறங்கி அந்த கட்டுகளைப் பொறுக்கி வரிசையாகத் தட்டி வைத்து "ஐயா! உங்களுக்கு அடி பட்டுவிட்டதா!"...என்று குயில் போலக் கேட்டாள். துரைராஜனுக்கோ ஒரு புறம் அவமானம் ஒரு புறம் நடிப்பு. இதோடு அந்த வண்டியைப் பார்த்த உடனேயே இது தனது ஆபீஸ் எஜமானரின் மோட்டார் என்று தெரிந்துகொண்டதோடு அந்த அம்மாள் அவருடைய மனைவி என்பதையும் அறிந்து கொண்டு அளப்பரிய ஆச்சரியமும், கடவுள் செய்துள்ள லீலைக்கு அபார சந்தோஷமும் அடைந்தான்.

உடன் வந்திருப்பவர்கள் தன் எஜமானரின் பெண்களாகத்தானிருக்கவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துவிட்டதால் அவர்களைத் தலை நிமிர்ந்தே பார்க்கவில்லை. மீனாக்ஷியின் குரல் கேட்டதும் இது எங்கோ கேட்ட குரல்போன்றிருக்கின்றதே என்று நிமிர்ந்து பார்த்தான்.

முன்னிலும் மெலிந்த தேகத்துடனும் மிக்க வணக்கத்துடனும் நிற்கும் மீனாக்ஷியைக் கண்டதும்...ஹா...தாங்களா! சௌக்யமா! இங்கு எப்போது வந்தீர்கள்...என் வீட்டிற்கு வரலாகாதா!...

எனக்கு அடி அதிகமாகப் படவில்லை. கொஞ்சந்தான் பட்டிருக்கிறது......என்று இவன் கூறி முடிப்பதற்குள் அந்த எஜமானியம்மாள் தன் மகளையும் மீனாக்ஷியையும் நோக்கி "அம்மா! இன்று புறப்பட்ட வேளை சரி இல்லை. நீங்களிருவரும் ஓர் டாக்ஸி கார் வைத்துக்கொண்டு நேரே வீட்டிற்குப் போய்விடுங்கள். நான் இவரை ஆபீஸில் கொண்டுவிட்டு அப்பாவிடம் நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு வருகிறேன். இவைகள் முக்கியமான ஆபீஸ் கட்டுகளாகையினால் எனக்கு மிக்க பயமாக விருக்கிறது" என்று கூறி உடனே ஒரு வாடகைக் காரையும் அமர்த்தி அவர்களை ஏற்றி அனுப்பிவிட்டாள்.

மீனாக்ஷி காரில் ஏறினபடியே "நான் வந்து பத்து தினங்களாகின்றன. பிறகு சந்திக்கின்றேன்" என்று கூறிச் சென்றுவிட்டாள். எஜமானியம்மாள் வண்டியில் துரைராஜாவையும் ஸைகிள், கட்டுகள் முதலியவைகளையும் ஏற்றிக்கொண்டு மிக்க பயத்துடன் நடுநடுங்கியவாறு ஆபீசை நோக்கிச் சென்றாள்.

இவர்கள் தற்கால நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்றவர்களாகையினால் இந்தம்மாள் தினந்தோறும் மாலையில் தான் காரோடு வந்து தன் புருஷனை அழைத்துச் செல்வது பழக்கம்; ஆகையினால் நேரே ஆபீஸுக்குச் சென்றாள். உள்ளே பயம் உதறுகின்றது. தன்னுடைய எஜமானரின் தனியறைக்குச் சென்று விடவிடத்தவாறு "நாதா! மன்னிக்கவேண்டும்; இன்று நமக்கோர் கண்டம் தவறியதாக நினைக்கவேண்டும்.

நமது ட்ரைவரின் அஜாக்ரதையினால் இதோ ஆபீசைச் சேர்ந்த துரைராஜா ஏறிவந்த சைகிலில் நமது வண்டி மோதி இவர் அப்படியே சைகிலோடு சேற்றில் விழுந்து சிறிது காயமும் ஏற்பட்டுவிட்டது. இதோ இக் கட்டுகளெல்லாம் சிதறிவிட்டன. எல்லாம் சேறாகிவிட்டது. இவரென்னவோ மெழுகு சீலைகூடப் போட்டுக் கட்டி வந்தார். கார் மோதிய வேகத்தில் சைகிளும் உடைந்துவிட்டதாக நினைக்கிறேன். நமது நற்காலந்தான் இவர் பிழைத்தார். நாமும்

தப்பினேம். நீங்கள் தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும்...... என்று பயந்தவாறு கூறினள்.

இம் மாதிரி எதிர்பாராத விஷயத்தைக் கேட்டதும் எஜமானர் திடுக்கிட்டார். எதிரில் நிற்கும் துரைராஜனின் வேஷத்தைப் பார்த்து திடுக்கிட்டு பரிதாபப்பட்டுத் தன் ட்ரைவர்மீது சீறி விழுந்தார். வேருெரு க்ளார்க்கை அழைத்து "இந்த கட்டுக்களை உடனே துடைத்துச் சரியாக்கிவிடு. கிழிந்திருந்தால் வேருெரு நகல் எடுத்து இதோடு கூட வை" என்று உத்திரவிட்டுப் பின் ராஜனை நோக்கி "சார்! என் மோட்டாரினலேயே உமக்கு விபத்து நேர விருந்ததற்கு மிகவும் வருந்துகிறேன். ஏதோ கடவுளுடைய கிருபையினல் இதுமட்டோடு தப்பியதற்காக சந்தோஷப்படுகிறேன். நீர் இந்த எதிர்பாராத விபத்து நேர்ந்ததற்காக என் மனைவியையும் என் ட்ரைவரையும் மன்னிக்கவேண்டும். உமது சைகிளை மாற்றிவிட்டு புதிய சைகில் இன்றே வாங்கிக்கொள்ளும். இதோ செக்கு....சரி... நீர் வீட்டிற்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு முடியுமானல் வாரும். இல்லையேல் இன்று முற்றும் ஓய்வு எடுத்துக்கொண்டு நாளை வாரும்" என்று கூறினன்.

இந்த அதியாச்சரியத்தைக் கண்ட துரைராஜாவின் சந்தோஷத்திற்கோ எல்லையே இல்லை. இந்த மொட்டைக் கடிதம் சாமானிய மானதல்ல. இது ஏதோ ஒரு தெய்வந்தான் அப்படி எழுதி யனுப்பி இருக்கிறது என்று கூறத் திறமற்ற வியப்பும் சந்தோஷமும் அடைந்தான். தானே வேண்டுமென்று செய்த காரியத்திற்கு இவரிடம் பணம் வாங்குவது சரியல்லவென்று எண்ணி அதற்கு மறுத்துவிட்டு வந்தனம் செய்து விடை பெற்றுக்கொண்டு நாளை வருவதாகவே சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

அவனுடைய முதல் நாள் வாழ்க்கையில் இருந்த வேதனையும் பயமும் எதிர் காலத்தைப்பற்றிய பயங்கரமும் இன்று சூரியனைச் கண்ட பனிபோல மறைந்து சந்தோஷச் சூரியனுய் உதய மாகிவிட்டதானது அவனல் தாங்க முடியாத சந்தோஷத்தை யுண்டாக்கியது. இந்த மொட்டைக் கடிதத்தைப் பலதரம் படித்தான்.

அவனுடைய மனம் முற்றும் அதே மொட்டைக் கடிதத்தில் சென்று லயித்து இதை யார் எழுதி இருக்கக்கூடும் என்ற பெரிய ஆவலும் அடக்கவியலாத எதிர்பார்ப்பும் உண்டாகிவிட்டன. எத்தனை யோசித்தும் புலப்பட வழி காணவில்லை.

* * *

மேலே நடந்த சம்பவங்கள் நிகழ்ந்து ஒரு மாத காலமாயிற்று. துரைராஜன் ஒரு தினம் ஆபீஸுக்குப் புறப்படும்போதும் ஒரு கடிதம் வந்தது. அதை பிரித்துப் பார்த்தான்.

"அன்பார்ந்த ஐயா!

நான் திடீரென்று நோய் வாய்ப்பட்டுக் கிடப்பதால் கடைசீ தரமாகத் தங்களைப் பார்க்கவேண்டு மென்று என்னால் தடுக்க வியலாத ஆவல் தூண்டுகிறது. தயவு செய்து கீழே காணும் விலாசத்திற்கு வர வேண்டுமாக மிகவும் தாழ்மையுடன் மன்றாடிப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
மீனாக்ஷி. (நர்ஸ்)"

அதைப் படித்த உடனே அவனுக்கு மனம் மிகவும் இளகிவிட்டது. தன்னுடைய உயிர் போகும் ஆபத்தான சமயத்தில் தன்னருகிலேயே இருந்து இராப்பகலாக அரும்பாடு பட்ட வனிதையல்லவா! கட்டாயம் சென்று பார்த்து வரவேண்டும் என்று தீர்மானித்துக் கடிதத்தை ஜோபியில் போட்டுக் கொண்டான்.

அன்று தன் உத்யோகசாலையிலிருந்து நேரே அந்த கடிதத்தில் கண்ட விலாசத்திற்குச் சென்றான். அங்கு ஓர் கயிறுக் கட்டிலில் உலர்ந்து போய் அடையாளமே கண்டு கொள்ள முடியாத விதம் மீனாக்ஷி படுத்திருந்தாள். அவள் பக்கத்தில் ஒரு வேலைக்காரக் கிழவி உட்கார்ந்திருந்தாள்.

துரைராஜன் சில பழ வகைகளை வாங்கிக்கொண்டு போயிருந்தான். அவற்றை அங்குள்ள மேஜையின் மீது வைத்து விட்டு

"அம்மணீ! உடம்பு எப்படி இருக்கிறது? என்ன உடம்பு?" என்று கேட்டவாறு அங்குள்ள ஆசனத்திலமர்ந்தான்.

அவனைக் கண்டதுமே மீனாக்ஷியின் உள்ளம் பூரித்தது. அவளுடைய இருதயத்தில் அவளால் தாங்கக் கூடாத ஓர் விதமான சந்தோஷமும் உணர்ச்சியும் எழுந்தன. மலர்ந்த முகத்துடன் "வாருங்கள்! வாருங்கள்! இந்த ஏழையின் மீது கருணை கூர்ந்து வருவீர்களோ, மாட்டீர்களோ என்று நினைத்திருந்தேன். சுமார் ஒரு மாத காலமாக உடம்பு சரியாயில்லை. எனக்கே என்னிலைமை தெரியாதா! மிகவும் கேலமாகிக்கொண்டு வருவதால்...............மேலே கூற மாட்டாது தவிக்கிறாள். கண்ணீர் பெருகுகின்றது. அப்படியே முகத்தை மூடிக்கொண்டாள். தேம்பித் தேம்பி துக்கம் வந்துவிட்டது.

துரைராஜன்:—(இதைக் கண்டு கலங்கிப் போய் விவரமறியாதவனாகையினால்) அம்மணீ! ஏன் புலம்புகின்றீர்கள்? உடம்பு குணமாகாது என்று அதைரியப்படுகிறீர்களா! அப்படிக் கொன்றுமிருக்காது. உங்களைப் பார்த்தால் மிகவும் தெளிவாக விருக்கிறீர்கள். பயப்படவேண்டாம்; அழாதீர்கள்......உங்களுக்கு இங்கு சகாயத்திற்கு யார் இருக்கிறார்கள்?

மீனாக்ஷி:—ஐயோ! எனக்குப் பயமா! நான் சாவுக்குப் பயப்படுவதாகவா நினைக்கிறீர்கள்? பல வருடங்களுக்கு முன்பே நான் சாகத்துணிந்து குளத்தில், கிணற்றில் விழுந்தும், விஷம் உண்டும் சாவை எதிர் நோக்கினேன்......நான் மகாபாவி......கொடும்பாவி ......ஆகையினால் இத்தனைக்கும் குண்டு போலப் பிழைத்துக் கொண்டேன். நிமிடத்திற்கு நிமிடம் சாவை நான் எதிர்பார்ப்பது அந்த பகவானுக்குத்தான் தெரியும்......இப்போதாவது ஒருகால் இப்பாவியின் மீது மனமிரங்கி காலனும் என்னைச் சேர்த்துக் கொள்வானோ என்று சந்தேகமே அடைகிறேன்.

ஐயனே! நான் எனது கடமைகளைக் கூடச் செய்யும் பாக்யம் அற்ற கட்டையானேன். எனது பிறவியில் நான் இன்ப மடைந்திருப்பேன் என்று இருக்குமாயின் அது இரண்டே முறைகள்.

இனி மூன்றும் முறையை எதிர் நோக்குகிறேன். ஒன்று ஜமீந்தாரின் வீட்டில் தங்களுக்கு—என் ப்ராணநாதருக்கு, 6 வயதில் மணந்திருப்பினும் நான் உரிமையுடையவளே யாவேன்—தாதியாக விருந்து சொல்ப தினங்கள் பணிவிடை செய்து மகிழ்ந்தேன்.

இரண்டாந்தரமாக என்னுருயிர்க் கணவரின் விபத்தை நீக்க மொட்டைக் கடிதமெழுதி விபத்தைப் பக்குவமாக நீக்கும் பொருட்டு முதலாளியின் மனைவியையே நான் ஓர் காரியமாகச் சிநேகம் செய்து கொண்டு அந்த சமயத்திற்கு அவ்வழியே வரச்செய்து அதே காரிணுல் விபத்து உண்டாகியதாகக் காரணங் காட்டினேன். இவ்விரண்டே என் வாழ் நாளில் செய்யக் கிடைத்த பலன்களாகும்.

இப்பாவியின் கடைசீ காலத்திலாவது இக்கட்டையை அதற்கு உரியவரிடம் சேர்ப்பித்து விட வேண்டும் என்ற ஓர் கொடிய வேட்கை தோன்றியதால் இக்கடிதம் எழுதினேன். நாதா! நான் விதிவசத்திணுல் அனுதையாகி விட்டேன். நான் ஓர் தாதியல்ல. பேதையல்ல......தங்களே எனது 6 வயதில் மணமாலே சூட்டிய மகா அபாக்யசாலியானேன்.......நாதா.......என்னே ஏற்றுக்கொள்வீர்களா!......நான் குற்ற மற்ற நிரபராதி......சந்தோஷ மென்பதை அவ்விரண்டு காலங்களேத் தவிர கனவிலும் கண்டறியாத அபாக்கிய சாலி.........என்னேக் கைவிட மாட்டீர்களே!..............நாதா! ப்ராணநாதா!.........இதோ! அந்த அருமையான கரத்தை இப்படிக் கொடுங்கள்.........கடைசீ காலத்திற்காவது எனக்குக் கடவுளால் உரியதாகக் கொடுத்த கரத்தை மகிழ்வுடன் பற்றிக்கொள்கிறேன்... நாதா!......தியங்கவேண்டாம்...இதோ என் வாழ்நாளே இது பரியந்தம் எங்ஙனம் கடத்தினேன் என்பதற்கு இந்த டைரியே சாக்ஷி... இதைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாதா! கடைசீ நிமிடத்திலாவது வாழாவெட்டி என்ற இழிச் சொல்லேக் களேந்து என்னேக் காப்பாற்றுங்கள்.'' என்று ஆவேசங்கொண்டவள்போலக் கூறி, தன் கணவனே தன்னுவல் தீர ஏற இறங்கப் பார்த்தாள். இரு கண்களும் சிறு அருவி போலப் பெருகுகின்றன.

இந்த அத்யாச்சரியமான விஷயங்களேக் கேட்டும் சம்பவங்க

ளைப் பார்த்தும் ஒன்றுமே தோன்றாதவனாய் தம்பித்துக் கதி கலங்கி நின்றான். "ஹா! என் மூத்த மனைவியா நீ!......நீ என் உத்தம பத்தினியா...மீனாக்ஷி! மீனாக்ஷி! உன்னுடைய ரகஸியத்தை நீ ஏன் ஒளித்தாய்!...அன்றே சொல்லி இருக்கலாகாதா!...இப்படியா மூடிவைக்க வேண்டும்!......மீனாக்ஷி! மீனாக்ஷி!......நீயா மொட்டைக் கடிதம் எழுதினாய்......என்ன ஆச்சரியம்......என்று நிலை கலங்கி பித்து பிடித்தவன்போலக் கூறிப் புலம்பினான்.

அடுத்த விநாடியே கட்டிலின்மீது தாவி மீனாக்ஷியைத் தூக்கித் தன் மடியில் கிடத்திக்கொண்டு அவள் முகத்தைத் தடவிக்கொடுக்கிறான். துரைராஜனின் கண்ணீர் மீனாக்ஷியின் மீது பனித்துளி போல விழுகின்றது மீனாக்ஷி என்ற பெயருக்கேற்ற விசாலமான கண்கள் கட்டு மீறிய அபாரமான சந்தோஷத்துடன் மலர்ந்து நீரைப் பெருக்குகின்றன. சூரியனைக் கண்டு தாமரை மலருவதே போல துரைராஜனாகிய சந்தோஷச் சூரியனைக் கண்டு தாமரைக் கொப்பான மீனாக்ஷியின் முகம் விகசிதமுற்று சோபிதமாக விளங்கியது. துரைராஜாவின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு அவனது அன்பிற்குள் ஐக்கியமாகிவிட்டாள். துரைராஜனின் உள்ளம் எப்படித்தானிருக்கும். கண்ணீர் வழிய மீனாக்ஷியை நோக்கிய வண்ணம் கல்லாய்ச் சமைந்துவிட்டான்.

முற்றிற்று.

---

இந்த கதையைப் படிக்கும்போதே கமிட்டியினர் மிகவும் திருப்தியும் உணர்ச்சியுங் கொண்டு ஸ்வாரஸ்யமாகக் கேட்டார்கள். படித்தவர் மனதும் பரம சந்தோஷத்தை யடைந்து "சார்! கதை எப்படி?" என்று கேட்டார.

கமிட்டியாரில் சிலர் "மிக்க ஸ்வாரஸ்யமாயும் உணர்ச்சியை அளிக்கக்கூடியதாயும் இருக்கிறது. சிறு கதை என்ற பெயர் மட்டும் பொருந்தாது. சற்று பெருங்கதைதான். ஆனாலும் ருசியா யிருப்பதால் நேரம்போவது தெரியவில்லை. இக் கதையைக் கேட்கும்போது

"அன்னை தயையும் "என்கிற பாடல் ஞாபகத்திற்கு வருகிறது. அப் பாடலை நன்கு விளக்கும் அருமை இதில் பொதிந்து கிடக்கின்றது." என்றார்கள்.

இன்னும் சிலர் "ஆமாம்! நாங்களும் அப்படியே நினைக்கிறோம் ...ஆனால் ஒன்று. இந்தப் பெண் முதலிலேயே தான் இன்னாரென்று ஏன் தெரிவித்திருக்கலாகாது? இது ஏன் தாமதமாகவேண்டும்...—

மானேஜர்:—இது ஒரு கேள்வியா! அப்படி தெரிவித்திருந்தால் தாங்கள் பாடலுக்கு இசைப்பது எப்படி முடியும். "விரன் மந்திரி மதியும்" என்றபடி எவ்வாறு யுக்தி செய்து மொட்டைக் கடிதம் எழுத முடியும்? இம் மாதிரி வரும் என்று ஜோஸியம் தெரியுமா வென்று கேட்காதீர்கள். கதையில் வருபவர்களுக்கு ஜோஸியம் தெரியாதெனினும் கதையின் ஆசிரியருக்குப் புதிதல்லவே! மேலும் அம்மாதிரி கதை முடிவதில் ஸ்வாரஸ்யமே இருக்க முடியாது. திடீ ரென்று கணவனைப் பார்த்ததே பெரும் பாக்கியம். தான் தான் மனைவி என்று கூறினால் அவன எப்படி நம்பிவிட முடியும்?

அதோடு கடுமையான நோயினால் படுத்திருக்கிறான். தன்னைப் பற்றி அவன் என்ன நினைத்திருக்கிறானோ அது தெரியாது. ஜெமீந் தார் சொல்லியதிலிருந்து தன் மீது பழியும் உலவுவதாகத் தெரிந்து கொண்டாள். அங்ஙனமிருக்க, தான் திடீரென்று மனைவி என்று தெரிவித்ததும் கோபங்கொண்டு உதறிவிட்டால் என்ன செய்வது. இம் மாதிரி யோசிப்பதும் கதா நாயகியின் முறையல்லவா!......திடீ ரென்று சொல்வது அசம்பாவிதமாகும். மேலே வளர்ந்து முடிந்தது தான் அழகாகவிருக்கிறது. மனைவியின் கடமையை மறைவிலிருந்தும் செய்து காட்டிய பெருமையை அடைய முடிகிறது.

இன்னொருவர்:—ஆம்! நீர் விளக்குவது வாஸ்தவந்தான். முடி வில் ஏன் அப்படி மொட்டையாக நிறுத்தவேண்டும். அதை விஸ்தரி த்து இருவரும் கூடி வாழ்வதுபோல முடித்திருந்தால்.........இப் போது :முடிவு உயிர் இருக்கிறதா, இறந்துவிட்டாளா! ஒன்றும் தெரிய வில்லையே!

மற்றொருவர்:—இதுதான் சார்! முக்யமான ஸ்வாரஸ்யம். படிப்பவர்களின் உணர்ச்சியை—கவர்ச்சியை—அதிகப்படுத்தும் விதம் இதுதான். யார் யார் மனப்படி எப்படி வேண்டுமாயினும் நினைத்துக் கொள்ளட்டும். சந்தோஷம், துக்கம் (டிராஜிடி—காமிடி) இரண்டும் கலந்த முடிவு மிகவும் எனக்குப் பிடிக்கிறது. அவளால் இருமுறை நன்மை யடைந்த பிறகு மனைவி என்பதை யறிந்தது மிகவும் சிலாகிக்கத் தக்கது. பிறகு பழய விவரம் அறிவதற்கும், அவளுடைய பரிசுத்தத்தை யறியவும் டைரியே போதுமானது. இன்னும் என்ன இருக்கிறது. மனத்தோடு மனங் கலந்துவிட்டார்கள். இவ்வளவு தானே முக்கியமானது.

இந்த சிறு கதைப் போட்டிக்காக வந்துள்ள கதைகளைப் படித்து தலைநோய் உண்டாகிவிட்டது. இங்கு குதித்தான். அங்கு ஓடினான். துப்பாக்கியால் சுட்டான். ஆகாசத்தில் ஜம்ப் பண்ணினான். பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனான். கொலை செய்தான். முகமூடிக் கள்ளன் வந்தான்......அப்பப்ப...இதுபோன்று இல்லாமல் சாதாரணமாக வாழ்க்கையில் நடக்கக்கூடிய விஷயங்களுக்கு கற்பனையும் மெருகும் கொடுத்திருக்கிறதே, அதுவே அழகாக விருக்கிறது ...என்றார் பிறகு இதை எல்லோரும் ஆமோதித்து அதற்கு வேண்டிய கடிதங்களை எழுதிவிட்டு மேலேயுள்ள கதைகளைப் படிக்கத் தொடங்கினார்கள்.

## 4-வது அதிகாரம்.

### பத்திரிகை உரைகள்—தத்தளித்த நிலைமை

நமது சாகரன் முன்பு கூறியது போல வெகு ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருந்த சமயம் அவனுக்கு தபால்கள் கிடைத்தன. அதோடு சில ரிஜிஸ்டர் பாக்கெட்டுகளும் வந்தன. இவைகளைப் பார்த்த உடனேயே தான் அனுப்பிய கதைகள் திரும்பி வந்துவிட்டன என்பது விளங்கிவிட்டது. உடனே கடிதங்களைப் படிக்கத் தொடங்கினான்.

போது ஊழியன் பத்திரிகாலயம்

பூபால நகர். ...தேதி—மாதம்—வருடம்.

"அன்பார்ந்த ஐயா!

வந்தனம். தாங்களனுப்பிய சிறு கதையும் கடிதமும் வந்து சேர்ந்தன. எங்கள் காரியாலயத்து வழக்கப்படி கதைப் பகுதி கமிட்டியாரின் முன்பு வைத்துப் பரிசீலனை செய்தோம். கமிட்டியாரின் அபிப்ராயம் கீழ்வருமாறு:—

இச் சிறு கதையைப் படித்தோம். இக் கதையில் கடைசீ பாகத்தைத் தவிர ஒரு நீதியா, ருசியா, அழகா, ஒன்றுமே எங்களுக்கு ஏற்படவில்லை. போலி சன்யாசிகள் ஏமாற்றும் விஷயத்தை எத்தனையோ பேர்கள் எவ்வளவோ அழகாக எழுதி இருப்பதால் இதுவும் புதிய அதிசயமான சம்பவமல்ல. இக் கதையை மட்டும் யாராவது படித்தால் இது விவகாரமறியாத சிறு பையன் எழுதியதாகவே தோன்றுகிறது. உங்கள் பெயரும் விலாசமும் உள்ள கடிதத்தைப் பார்த்த பிறகுதான் பெரியவர்கள் எழுதியதாக நினைக்கவேண்டியிருக்கிறது. பெண் பிள்ளைகளின் பெயர்கூட வராத கதையாக இது இருக்கிறது. அம் மாதிரி சிலர் சிறு கதை எழுதுவதுண்டு; ஆனால் அந்த வகையில் இது அமையவே இல்லை. உப்பில்லாத சமையல்போல இது வேண்டுமென்று எழுதியதாகத் தோன்றுகிறது. இதையே மாற்றியோ புதுப்பித்தோ எழுதினால் பிறகு பார்க்கலாம். வந்தனம்.

இங்ஙனம்

கமிட்டியார்."

"இந்தியச் சோதரன்" பத்திரிகாலயம்.

...தேதி.—மாதம்.—வருடம்.

"ஐயா! வந்தனம்.

தங்கள் கடிதமும் கதையும் வந்தன. போட்டிக்குத் தகுந்த கதை இதுவல்ல என்று எங்கள் கதைப் பகுதி கமிட்

டியார் தீர்மானித்துவிட்டார்கள். இதில் ஒருவிதமான உணர்ச்சியோ, ஸ்வாரஸ்யமோ, ருசியோ, திடுக்கிடும் சம்பவமோ!...... கதைக்கு வேண்டிய ஒன்றுமே இல்லாது அமங்கலியின் கழுத்து போல விருப்பதால் இதைத் திருப்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.''

''உண்மை மித்திரன்'' காரியாலயம்.

...தேதி—மாதம்—வருடம்.

''ஐயா! வந்தனம்.

தங்கள் கடிதமும் சிறு கதையும் வரப்பெற்றோம். இக் கதையை பரிசீலனை செய்ததில் கதை என்ற பெயருக்கே இது லாயக்காக இல்லை என்பது எங்கள் கமிட்டியின் தீர்மானம். வீட்டிற்கு அலங்காரம் குழந்தைகள். அக் குழந்தைக்கு மூல கர்த்தர்கள் பெண்மணிகள். அத்தகைய பெண்மணிகள் மருந்துக்கும் இல்லாது இக் கதை எழுதியிருப்பதானது சிறிதும் பொருத்தமில்லை. பள்ளிக்கூட மாணவர்களுக்குத் தாயார்கள் புத்திமதிகள் போதிப்பதுபோல சந்தர்ப்பங் காட்டி பல அரிய நீதிகளை கதையில் புகுத்தி இருக்கலாம். நீதி என்பது இதில் ஒரு இடத்திலும் இல்லை. மாணவர் படிப்பதும் உபாத்தியாயர் சொல்வதும் ருசியற்ற விஷயமாக விருக்கிறது.

இயற்கை யழகைப் பார்ப்பதாக இருக்குமிடத்திலாவது சற்று பொருள்பட பல வர்ணனைகளைக் காட்டி இருக்கலாம். சில பெண்கள் ஆற்றில் ஸ்நானம் செய்து செல்வதாயும் மாமிகள் தங்கள் கொடுமைகளைக் காட்டி வம்பு பேசி உத்தமியான மருமகளையும் மகனையும் திட்டுவதாயும் உபாத்தியாயர் மாணவர்களுக்கு இம்மாதிரி செய்வது அநீதி இப்படி நீங்கள் நடக்காது புத்திசாலிகளாக இருக்கவேண்டும் என்று ஒரு உபாத்தியாயினி இதன் மூலம் பல நீதிகளைப் போதிப்பதாகக் காட்டி இருந்தாலும் நன்றாக இருக்கும்......இதுவே முதல் கதை என்று நினைக்கிறோம். வேறு நன்றாக எழுதி யனுப்பினால் பார்க்கிறோம்.

பத்திராதிபர்.

"ஜன நாயகம் பத்திரிகாலயம்" ...தேதி—மாதம்—வருடம்.

"ஐயா! வந்தனம்.

உங்கள் கடிதமும் கதையும் கிடைத்தன. எங்கள் கமிட்டியினால் பரிசீலனை செய்யப்பட்டது. இதில் எந்த அம்சத்திற்காக கதை என்ற பெயர் கொடுக்கப்பட்டதென்றே எங்களுக்கு விளங்கவில்லை. சன்யாசி சமாச்சாரத்தை அர்த்தமில்லாமலும் அனுவசியமாயும் கொண்டு புகுத்தி இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம்.

உபாத்தியாயருக்குப் பெண் கொடுக்க சம்மதப்படவில்லை. நான்கு பிள்ளைகள் இருப்பதே காரணம் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதாகும். எங்காவது ஒரு கிழவனோ, வியாதியஸ்தனோ, தரித்திரனோ நான்காம் கல்யாணக்காரனோ எவனோ ஒருவன் கிடைத்தால் போதும் என்று காத்திருக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கை இத்தனை நாகரீகமும் பெண் கல்வியும் முதிர்ந்திருக்கையிலும் குறையவில்லை. இது உண்மையா வென்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு.

அங்ஙனமிருக்கையில் இவருக்கு போதிய சம்பாத்திய மிருக்கிறது. சிறிய வயது மிருக்கிறது. பெண் கொடுக்க மறுப்பது ஒவ்வாத கற்பனையாகும். இத்தனை கஷ்டப்பட்டுக்கொண்டு காலத்தைக் கடத்த உபாத்தியாயரும் சம்மதிக்க மாட்டார். இது வேண்டுமென்றே ஆசிரியர் திட்டம் செய்து எழுதிய கூற்றாகும்.

விவாகம் செய்துகொள்ள பிரயத்தனம் செய்து விவாகத்தைச் செய்துகொண்டு குடும்பம் நடத்தி இருப்பதாக இருந்தால் சற்று நன்றாக இருக்கும். ஆரம்பமும் முடிவும் மாணுக்கரும் உபாத்தியாயரும் மத்தியில் ஓர் சன்யாசியும் ஒன்றுக்கொன்று புணை இன்றி முடித்திருக்கிறது.

இயற்கை யழகைக் காண்பதாக ஆரம்பித்திருக்கிறீர்.

அதிலும் ஒரு அதிசயத்தையும் காணவில்லை. இயற்கையைக் கண்டு வர்ணிப்பதும், சித்திரம் எழுதுவதும், போட்டோ பிடிப்பதும் ஏதாவது ஓர் பிரயோஜனமாகிய காரியத்தை மாணுக்கர்கள் செய்து அதைக்கொண்டு பரிசு பெற்றதாயும் அந்த பரிசின் மூலம் அந்த ஏழை மாணுக்கனின் குடும்பத்திற்குச் சந்தோஷமுண்டாகி அவன் பெற்றோர்கள் உபாத்தியாயருக்கு தமது சந்தோஷத்தையும் நன்றியையும் செலுத்துவதும் அதே மாதிரி மற்ற பிள்ளைகள் தாமும் பரிசு வாங்கும் ஆசையுடன் நன்ருகப் படிக்கவாரம்பித்தார்கள் என்றும் எழுதி இருந்தாலும் ஏதோ ஒருவாறு சிறிது ருசிக்கும்.

இதில் ருசி ஒன்றுமே இல்லை. உப்பில்லை. புளிப்பு இல்லை. இனிப்பு என்பது முதலே இல்லை. இதைப் பொட்டியில் வைப்பதற்கு ஒரு அம்சமுமே இல்லை. பெண்பிள்ளை வேலைக்காரிகூட இக் கதையில் காட்டாது வேண்டுமென்றே விலக்கி இருப்பதாகத் தெரிகிறது. பெண்களே இல்லாத கதைகள்கூட ருசிக்காது என்பது பகு ஜன வாக்கு. அப்படி சிலர் சில கதை எழுதினுலும் அமைப்பையே வேறு மாதிரி மாற்றி ஆரம்பமுதல் அமைத்து ஓர் தினுசாக உணர்ச்சி கொடுக்கக் கூடியதான முறையில் எழுதுவார்கள்.

அதாவது இரு நண்பர்கள் ஒருவருக்கொருவர் சந்திப்பதும், படிப்பதும் சமையா சமயங்களில் ஒருவரையொருவர் காத்து உதவுவதும், ஆபத்துக் காலங்களில் ஆதரிப்பதும், தீர சூர காரியங்களைச் செய்வதும், பெரிய திருட்டு முதலியன கண்டு பிடிப்பது......போன்ற சில அம்சங்கள் வெகு ருசியாகக் காணும். அதிலும் ஓர் வேலைக்காரியாவது...கிழத் தாய்மார்களாவது காண்பார்களே யன்றி பூஜ்பம் செய்ய மாட்டார்கள்.

உங்கள் கதையில் சந்தர்ப்பம் நிறைய இருப்பதையே நீங்கள் கைவிட்டு விலக்கி எழுதி இருப்பது மிகவும் வெறுக்கத் தக்கதாக இருக்கிறது. சன்யாசியின் மோதிரத்தை ஓர் பெண் பிள்ளையின் கையில் கண்டதாக எழுதி இருந்தால் அச் சன்யா

சியின் வாழ்க்கை, ஆபாச மோசத்தை இன்னும் தெளிவாக விளக்கி இருக்கும். ஷாப்பு வைத்து விற்பது பெரிய குற்ற மல்ல. அவருக்கு வரும் காணிக்கைகளை எப்படியாவது விற்றுத் தானே பணமாக மாற்றவேண்டும். இதற்கு தனி ஷாப்பிருப் பது வியப்பே இல்லை. விலை மாது என்றால் நீர் கொண்ட கருத் திற்கு முற்றிலும் பொருத்தமாக விருக்கும்.

நீர் இதையே மாற்றியமைத்தோ, வேறு கதையோ இன் னும் ஒரு மாதத்திற்குள் அனுப்பினால் நாங்கள் பரிசுப் போட்டி யில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்து அவைகளுக்குள் எது சிறந்ததோ அதற்குப் பரிசு வழங்குவோம். உம்முடையதே சிறப்பாக விருக்கும்படிக்கு எழுத முயற்சிப்பீர் என்று நம்புகி றோம். நாங்கள் எவ் விஷயத்தையும் ஒளிப்பவர்களல்ல வாகை யினால் விவரமாக விளக்கிவிட்டோம். வெளிப்படையாகச் சொல்வதுதான் விருத்தி செய்யும் வகையில் நன்மையாகும். என்பது எங்களுடைய அனுபவமாகும்.........

இங்ஙனம்

பத்திரிகாசிரியர்.''

இக் கடிதங்கள் ஒவ்வொன்றையும் படித்துக்கொண்டே வரு கையில் நமது சாகரனின் முகம் சுருங்குகிறது. கோபமும் அவமான மும் கூடி வதைக்கின்றன. உலகம் இப்படியா இருக்கின்றது. என்று தனக்குள் வியப்புற்று பெருமூச்சு விட்டான். வந்த பத்திரி கைகளை எல்லாம் புரட்டினான். ஒன்றில் கொட்டை எழுத்தில்

"வாழாவெட்டி''

உணர்ச்சியளித்துப் பரவசமுறச்செய்யும் சிறு கதை

500 ரூபாய் பரிசு பெற்றது.

ஸ்ரீமான். P. S. சிவாநந்தம் என்பவரால் இயற்றப்பட்டது. என்ற தலையங்கத்தைப் பார்த்ததும் பிரமிப்படைந்துபோய் உடனே அதைப் படிக்கத் தொடங்கினான். கதையின் பெயரே "வாழா வெட்டி!' என்று பெண்ணைக் குறிப்பதாக இருப்பதை நோக்கினான். அவனுக்கு இயற்கையாக உள்ள வெறுப்பும் ஆத்திரமும் கொண்டு அதை வாசிக்கவிடாது தடுத்துவிட்டன. பத்திரிகையை வீசி எறிந் தான்.

"சிவாநந்தம் 500 ரூபாய் பரிசு வாங்கிவிட்டானா!......வாழா வெட்டியா!...வாழும் வெட்டி இல்லையா!...என்று ஒரு விதமாக நினைத்தான். தானும் சிவாநந்தமும் ஒரே நாளில் கதைகளை யனுப்

பியதும் அவன் கதை பரிசுடன் பிரசுரமானதையும், தன் கதை குற்றச் சாட்டுகளுடன் திரும்பி வந்ததையும் எண்ணி பெருமூச்சு விட்டான்.

அதே சமயம் செட்டியாரின் மோட்டார் வீதியில் வந்து நின்றது. கண்டு இவனும் தயாராகப் புறப்பட்டு செட்டியாருடன் மகாத்மா காந்தியைப் பார்க்கச் சென்றான். மகாத்மா தங்கியிருந்த பிரம்மாண்டமான மாளிகையின் முதல் கேட்டிலேயே சில தொண்டர்களும், தேசசேவிகைகளும் காவலாக நின்றிருந்ததைக் கண்ட செட்டியார் ஆநந்தப் பரவசமானார்: நமது சாகரனோ "அட சனியன்களே! இங்குமா பெண் தொண்டர்கள் நிற்கிறார்கள்!" என்று வெறுத்தான்.

தலை குனிந்துகொண்டு உள்ளே சென்றான். ஏராளமான ஜனங்கள் அந்த புண்ணிய சீலரின்...தியாகமூர்த்தியின்—சாந்தியின் காந்தியை—தரிசிக்க காத்துக்கொண்டு வெயிலையும் பாராது நின்றிருந்தார்கள். இவர்களையும் தொண்டர்கள் குறிப்பிட்ட இடத்தில் உட்காரவைத்தார்கள். செட்டியாருக்குத் தெரிந்த பல பெரிய மனிதர்கள் அங்கு வந்திருந்தார்கள். செட்டியார் அவர்களுடன் பேசிக்கொண்டே அந்த பந்திக்குச் சென்றார்.

தனக்கு துணையும் அகப்படாமல் தனிமையில் உட்கார்ந்திருக்கிற சாகரனுக்கு மனது சரிப்படவே இல்லை. அவன் ஏதோ பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் நாலைந்து தேசசேவிகைகள் அங்கு வந்து "ஐயா! இது இன்று காலைப் பத்திரிகை தானே! தயவுசெய்து இப்படி ஒரு நிமிடம் கொடுங்கள். ஒரு முக்யமான விஷயத்தைப் பார்த்து விட்டுக் கொடுத்து விடுகிறோம்" என்று மரியாதையாகக் கேட்டார்கள்.

இந்த எதிர்பாராத நிகழ்ச்சியைக் கண்டதும் ஏற்கெனவே மனம் சரியில்லாத சாகரனுக்கு இன்னும் அதிகரித்த வெறுப்பும் வியப்பும் ஒரு விதமான கூச்சமும் உண்டாகிவிட்டன. உண்மையில் நாலைந்து பெண்கள் தன்னெதிரில் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டான். இதற்குத்தான் என்ன பதில் சொல்வதென்பதையும் மறந்தான். பேசாது எழுந்து போய் விடலாமா!......பெண் பேய்கள் நான் கனவிலும் கருதாதபடி வந்து விட்டார்களே!......என்று பரம சங்கடத்துடன் குனிந்த தலை நிமிராது குழம்பிப் போய் யோசனையில் ஆழ்ந்துவிட்டான்.

"அன்பான சகோதரிக்கு நமஸ்காரம்.

தங்களை முன்பின் அறியாதிருந்தாலும் என் மனதிலுள்ள ஆசையினால் உங்களுக்கு எழுத முன் வந்தேன். இதைப் போல எத்தனையோ பேர் உங்களுக்கு எழுதியிருக்கலாமாகையால் இது ஒன்றும் ஆச்சரியமாயிராது. நான் தாய் நாட்டை விட்டு இங்கு வந்து பல வருஷங்களாய் விட்டன. என்னுடைய இவ்வளவு ஆவலுக்குக் காரணமென்ன வென்றால் இந்நாட்டைப் பார்ப்பதற்காக எனது உறவினள் இப்போது வந்தாள். அவள் கப்பல் பிரயாணத்திற்காக வாங்கி வந்த சில தமிழ் புத்தகங்களைப் பார்த்தேன். அதில் ஜகன்மோகினியில் வெளியான பிச்சைக்காரக் குடும்பம் என்ற சிறிய நாவலைப் பார்த்ததும் இது என்ன பெயர் என்னமோ போலிருக்கேன்னு நினைத்து என் உறவினரிடமும் சொன்னேன். அவள் தங்களுடைய நாவல்களையும், தேசசேவையையும் பற்றி எவ்வளவோ தெரிவித்து அதை அவசியம் படிக்கச் சொன்னாள். அதைப் படித்த போது எனக்கு கதை படிப்பதாகத் தோன்றவில்லை. நேரில் பார்ப்பது போலவும், ஸினிமா டிராமா பார்ப்பது போலவும் இருந்தது. புயல் காற்றும், மழையும், பிச்சைக்காரக் கிழவனின் பிணமும், அனாதைப் பெண்ணின் பரிதாபகரமான நிலைமையும் இப்போதும் என் கண் முன் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அவளிடமிருந்த உங்களுடைய நாவல்களை—படாடோபத்தின் பரிபவம் சுகுண பூஷணம், ஜயஸஞ்சீவி, சோதனையின் கொடுமை படித்தேன். இப்படிப்பட்ட அருமையான நாவல்களை யெல்லாம் ஸினிமாவில் காட்டினால் படிக்கத் தெரியாத பாமர ஜனங்களும் கண்டு சந்தோஷப்படுவார்களே, ஏதேதோ உபயோகமில்லாத படங்களெல்லாம் வருகின்றதே என்று வருத்தப்பட்டேன். என்னுடைய பர்த்தாவும், படித்துவிட்டு "நான் ஒரு ஸினிமாக் கம்பெனிக்காரனாயிருந்தால் பிச்சைக்காரக் குடும்பம், படாடோபத்தின் பரிபவம் இரண்டையும் முதலில் எடுத்துவிட்டு மறுவேலை பார்ப்பேன்" என்றார். தாங்கள் எழுதிய எல்லா நாவல்களையும் படிக்க ஆவலாயிருப்பதால் அவற்றை எனக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன். முன் பணம் அனுப்பியிருக்கிறேன். கடவுள் உங்களுக்குத் தீர்க்காயுளைக் கொடுத்து நமது சமூகத்திற்குத் தொண்டு புரிய அருள் செய்யும்படிப்பிரார்த்திக்கிறேன்

ரங்கூன்
22-10-35 }

தங்கள் சகோதரி
தங்கமணி."

182982

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS

# M. SULTAN ABDUL KADER,

## SULTANIA MEDICAL HALL, (Estd. 1915.)

## PORTO-NOVO. S. A. DISTRICT (INDIA).

இதனை வாசிக்கும் புத்திமான்களுக்கும் பக்திமான்களுக்கும் ஓர் விண்ணப்பம்
இழந்துபோன பலத்தை ஒரே வேளை லேகியம் சாப்பிட்ட 1-மணி நேரத்தில் கொடுக்கும்.

நண்பர்காள்! சுல்தானியா மேடல் பெற்ற

# சிட்டுக்குருவி சத்தின் லேகியத்தை

வாங்கி சாப்பிட்டு குணத்தைக் கண்டு மென்மேலும் ஆர்டர் கொடுத்தும் இக்கம்பெனி முன்னேற்றத்திற்கு வரும்படி செய்ய வினயமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். வஸ்ஸலாம்.

அவனியாரே! **பர்மா கவர்னரின் டாக்டர் சர்டிபிகேட்!** கவனிப்பீரே!!

"நான் இரங்கூன் பஞ்சசக்தி கம்பெனியிலிருந்து பரங்கிப்பேட்டை சுல்தானியா வைத்தியசாலை சொந்தக்காரரால் செய்யப்பட்ட சிட்டுக்குருவி சத்தின் லேகியம் வரப்பெற்று அருந்திப் பார்த்தேன். அது தேகவலுவையும், வீரிய விர்த்தியையும், தாதுபுஷ்டியையும் கொடுக்கிறது. இன்னும் இந்த லேகியத்தில் அநேக குணங்களிருக்கின்றன."

டாக்டர் சையத் மேஜர் அலிகான் சாயபு,
கவர்னர் மாளிகை, பர்மா, 20—12—24.

கொழும்பு போலீஸ் மாஜிஸ்டிரேட் மகாகனம் பொருந்திய H. P. கப்மான்ஸ் அவர்களால் 1—12—1927ல் 864 நெ. ரிப்போர்ட் ஸிலோன் கவர்ன்மெண்டு அன்லிஸ்ட் (மருந்து பரிசோதக அதிகாரி] மகாகனம் பொருந்திய C. T. ஸைமன்ஸ் அவர்களுக்கு அனுப்பி 13-12-1927ல் பரிசோதனை செய்தது ரிப்போர்ட்டு நெ. 880. 12-12-1927)



லேகியத்தின் குணமாவன:—வாத பித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழு வகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்திவெட்டைச்சூடு, வீரிய நஷ்டம், சதா இடுப்புவலி, மலச்சிக்கல், பசிமந்தம், பித்தாதிக்க உஷ்ண வாய்வு, கிருமிரோகம், தூர்நீர் வியாதிகள், தேகத்தில் ஓடித் திரியும் பலவகை வாய்வு ரோகம், பார்சவாய்வு, நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசதி, மறதி, மனோசக்தி நாளுக்கு நாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமப்படுத்தி இரத்தத்தை விர்த்தி செய்து புத்தி சாதுர்யத்தைக்கொடுத்து தேகத்துக்கு நல்ல பலத்தை உண்டாக்கும். இந்த லேகியத்தை பால்யர் முதல் வயோதிகர் வரையில் சாப்பிட்டால் தேகத்திற்கு நல்ல பலத்தைக்கொடுக்கும். ஒருமுறை பரீக்ஷை செய்து பார்க்கவும்.

| | | |
|---|---|---|
| 40 நாள் சாப்பிடும் டப்பி ரூ. | 12 | 0 |
| 12 நாள் பரிட்சைசெய்ய ரூ. | 3 | 8 |
| 4 நாள் 8-வேளை | 0 | 12 |
| 20 நாள் சாப்பிடும் டப்பி ரூ. | 6 | 8 |
| 8 நாள் 16 வேளை டப்பி ரூ. | 1 | 8 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

**M. சுல்தான் அப்துல் காதர்,**
சுல்தானியா வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு
ஜில்லா. (இந்தியா)

ஏஜண்டு:—
**S. E. காதர் முகியதீன்**
நெ. 39, ஓல்டு புட்சர் ஸ்டிரீட்,
கொழும்பு, சிலோன்.

ஆர்டர் செய்யும்போது இந்த சஞ்சிகையைக் குறித்து எழுதவும்.

Jaganmohini (November 1935) Regd No. M. 2210

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

## அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.